(ஒன்பதாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

**இல. 2.]**

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் புத்தகம்

**2020 நவெம்பர் 12, வியாழக்கிழமை உட்பட அன்றைய தினத்திலிருந்து**
**2020 நவெம்பர் 05, வியாழக்கிழமை வெளியிடப்பட்டது**

## 2020 நவெம்பர் 12, வியாழக்கிழமை

## பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

* 1.

ஒதுக்கீடு (2020) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 2.

ஒதுக்கீடு (2021) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 3.

கடை, அலுவலக ஊழியர் (ஊழியத்தையும் வேதனத்தையும் ஒழுங்குபடுத்தல்) (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 4.

பெண்களையும், இளம் ஆட்களையும் மற்றும் பிள்ளைகளையும் தொழிலுக்கமர்த்துதல் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 5.

குறைந்தபட்ச வேதனங்கள் (இந்தியத் தொழிலாளர்கள்) (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 6.

தொழிற்சாலைகள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றன.

## 2020 நவெம்பர் 18, புதன்கிழமை

# வாய்மூல விடைக்கான வினாக்கள்

1.

5/2020

கௌரவ ஹேஷா விதானகே,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) 2010 ஆம் ஆண்டு தொடக்கம் 2018 ஆம் ஆண்டு வரை கொழும்பு, இரத்தினபுரி, காலி, மாத்தறை, கண்டி, குருணாகல், யாழ்ப்பாணம் மற்றும் கம்பஹா ஆகிய மாவட்டங்களில் அமைந்துள்ள தேசிய பாடசாலைகளில் 5 ஆம் தரத்தினதும் 6 ஆம் தரத்தினதும் ஒத்த வகுப்புகளின் எண்ணிக்கை, வெவ்வேறாக எவ்வளவென்பதை அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) 2010 ஆம் ஆண்டு தொடக்கம் 2018 ஆம் ஆண்டு வரை மேற்குறிப்பிட்ட பாடசாலைகளில் —

(i) தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையின் வெட்டுப் புள்ளிகள் எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் தரம் 6 இற்கு சேர்ந்த மாணவர்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iii) தரம் 6 இற்கு சேர்ந்த மொத்த மாணவர்களின் எண்ணிக்கையில், புலமைப் பரிசில் பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில் சேர்ந்த மாணவர்களின் சதவீதம் எவ்வளவென்பதையும்;

அவர் வெவ்வேறாக இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) மேற்படி பாடசாலைகளில் 2010 ஆம் ஆண்டு தொடக்கம் 2018 ஆம் ஆண்டு வரை தரம் 6 இற்கு புலமைப் பரிசில் பெறுபேறுகளின் அடிப்படையில் அல்லாமல் ஆரம்பப் பிரிவிலிருந்து வருகின்ற மாணவர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

அவர் மேலும் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2.

51/2020

கௌரவ சமிந்த விஜேசிறி,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இலங்கையில் முதலாவது கொவிட்-19 நோயாளி அடையாளம் காணப்பட்ட திகதி யாதென்பதையும்;

(ii) அத்திகதி முதல் இன்று வரை நாளாந்தம் அடையாளம் காணப்பட்ட கொவிட்-19 தொற்றியுள்ள நோயாளிகளின் எண்ணிக்கை தனித்தனியே யாதென்பதையும்;

(iii) அத்திகதி முதல் நாளாந்தம் மேற்கொள்ளப்பட்ட பீ.சீ.ஆர். (PCR - Polymerase Chain Reaction) பரிசோதனைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iv) கொவிட்-19 நோயை தடுப்பதற்காக மேற்கொண்டுள்ள நடவடிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3.

94/2020

கௌரவ புத்திக பத்திறண,— பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) உலக நாடுகளின் இணக்கப்பாட்டின் அடிப்படையில் உயிரியல் ஆயுதப் பாவனை தடைசெய்யப்பட்டிருந்தாலும் பல்வேறான அரசியல் மற்றும் வர்த்தக உத்திகளுக்காக இரகசியமாக தற்போதும் பயன்படுத்தப்படுகின்றது என்பதையும்;

(ii) இலங்கை உட்பட குறை அபிவிருத்தி நாடுகள் இந்த உயிரியல் ஆயுதங்களை பரீட்சித்துப் பார்ப்பதற்கான நாடுகளாக இலக்கு வைக்கப்படலாம் என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) உயிரியல் ஆயுதத் தாக்குதல்களை தடுப்பதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொண்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அந்நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

4.

116/2020

கௌரவ துஷார இந்துனில் அமரசேன,—போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) குருணாகல் மாவட்டத்திலுள்ள இலங்கை போக்குவரத்துச் சபை டிப்போக்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி டிப்போக்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) ஒவ்வொரு டிப்போக்களிலும் தற்சமயம் சேவையில் ஈடுபடுவதற்கு பொருத்தமான நிலையில் உள்ள பேருந்துகளின் எண்ணிக்கை தனித்தனியே எவ்வளவென்பதையும்;

(iv) மேற்படி ஒவ்வொரு டிப்போக்களிலும் உள்ள ஊழியர் வெற்றிடங்களின் எண்ணிக்கை தனித்தனியே எவ்வளவென்பதையும்;

(v) குருணாகல் மாவட்டத்தில் உள்ள இலங்கை போக்குவரத்துச் சபை டிப்போக்களில் பேருந்து தொகுதிகளையும் மனித வளத்தையும் மேம்படுத்துவதற்கு அமைச்சு மேற்கொள்ளவுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

5.

121/2020

கௌரவ நலின் பண்டார ஜயமஹ,— பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) பிங்கிரிய ஏற்றுமதி தயாரிப்பு வலயத்திற்குரியதாக இதுவரை கைச்சாத்திடப் பட்டுள்ள முதலீட்டு உடன்படிக்கைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி முதலீடுகளின் பெறுமதி யாதென்பதையும்;

(iii) மேற்படி முதலீடுகளில் இன்றளவில் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளவற்றின் எண்ணிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

6.

126/2020

கௌரவ சாள்ஸ் நிர்மலநாதன்,— பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பிரதான குளங்களில் ஒன்றான நஞ்சுண்டான் குளத்தை புனரமைப்புச் செய்வதற்கான கடந்த அரசாங்கத்தினால் அங்கீகாரம் வழங்கப்பட்டு அதற்காக 40 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் தொடர்ச்சியாக பெய்துவந்த மழையின் காரணமாக குறிப்பிட்ட புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்படாமல் ஒதுக்கமானது திருப்பியனுப்பப் பட்டுள்ளது என்பதையும்;

(ii) இக்குளத்தின் நீரைப் பெறுகின்ற பெருமளவிலான வயல்களும் மேட்டு நிலங்களும் காணப்படுவதோடு கிராமிய மக்கள் தமது வாழ்வாதாரத்தின் பொருட்டு இக்குளத்தின் மீது நம்பிக்கை வைத்துள்ளனர் என்பதையும்;

(iii) நஞ்சுண்டான் குளக்கட்டிலுள்ள அநாவசியமான மரங்களை வெட்டி அகற்றுவதற்கு மரக் கூட்டுத்தாபனத்திற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ள போதிலும் போக்குவரத்துக்கான வீதி சேதமடைந்துள்ளதனால் இதுவரை அது நடைமுறைப்படுத்தப்படவில்லை என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) ஆமெனில், மேற்படி நஞ்சுண்டான் குளத்தின் புனரமைப்புப் பணிகளுக்காக நிதி ஒதுக்கப்படும் திகதி யாதென்பதையும்;

(ii) போக்குவரத்துக்கான வீதி புனரமைக்கப்பட்டு, மேற்படி குளத்தின் புனரமைப்புக்கான பணிகள் ஆரம்பிக்கப்படும் திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

7.

151/2020

கௌரவ எஸ்.எம். மரிக்கார்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கொழும்பு 14, ஸ்ரீ சங்கபோதி மகா வித்தியாலயத்தின் மூன்று மாடிக் கட்டிடத்தின் கூரை பழுதடைந்து அதன் ஒரு பகுதி உடைந்து வீழ்ந்துள்ளது என்பதையும்;

(ii) அதன் காரணமாக மாணவர்கள் பாதுகாப்பற்ற நிலைக்கு ஆளாகியுள்ளனர் என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) இது தொடர்பில் கல்வி அமைச்சு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

8.

221/2020

கௌரவ மொஹொமட் முசம்மில்,— பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரையிலான ஒவ்வொரு வருடத்திலும் —

(i) இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட இலத்திரனியல் உபகரணங்களின் அளவு யாதென்பதையும்;

(ii) மேற்படி இலத்திரனியல் உபகரணங்கள் எந்தெந்த நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டன என்பதையும்;

(iii) மேற்படி இலத்திரனியல் உபகரணங்களை இறக்குமதி செய்த கம்பெனிகள் யாவையென்பதையும்;

தனித்தனியாக அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மேற்படி காலப்பகுதியில் இலங்கைக்கு இலத்திரனியல் உபகரணங்களை இறக்குமதி செய்வதற்காகச் செலவாகிய மொத்தத் தொகை எவ்வளவென்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

9.

306/2020

கௌரவ வேலு குமார்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) கண்டி மாவட்டத்தின் கட்டுகஸ்தோட்டை கல்வி வலயத்தில் 3 ஆவது வகைக்குரிய (Type 3) பாடசாலையான கசாவத்த வித்தியாலயம் அமைந்துள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) மேற்படி பாடசாலையில், இன்றளவில் —

(i) கல்வி கற்கின்ற மாணவர்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) பயன்பாட்டிலுள்ள வகுப்பறைகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iii) பயன்படுத்தப்படுகின்ற மொத்த நிலப்பரப்பு எவ்வளவென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) மேற்படி பாடசாலையில் பயன்படுத்தப்பட்ட கட்டிடமொன்று, தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்தினால் பாவனைக்கு உகந்ததல்ல எனப் பரிந்துரைக்கப்பட்டுள்ளதென்பதையும்;

(ii) மேற்குறிப்பிட்ட கட்டிடத்தை பயன்படுத்துவதிலிருந்து நீக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளதென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஈ) ஆமெனில், அதற்குப் பதிலாக புதிய கட்டிடமொன்றை நிர்மாணிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதை இச்சபைக்கு அறிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

10.

432/2020

கௌரவ சாந்த பண்டார,— வர்த்தக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) குறைந்த வருமானம் ஈட்டும் குடும்பங்களிலிருந்து அரசாங்கப் பல்கலைக்கழகங்களுக்கு தெரிவாகும் மாணவர்களுக்கு மஹபொல புலமைப் பரிசில் வழங்கப்படுவதை அவர் அறிவாரா?

(ஆ) (i) 2020 ஆம் ஆண்டில் மஹபொல புலமைப் பரிசில் வழங்கப்பட்ட ஒட்டுமொத்த மாணவர்களின் எண்ணிக்கை;

(ii) மேற்படி புலமைப் பரிசிலைப் பெறுவதற்கு இருக்க வேண்டிய ஆகக் குறைந்த தகைமை யாது;

என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) (i) மஹபொல புலமைப்பரிசில் பெறுவதற்கான தகைமை இருந்தும் அந்தப் புலமைப் பரிசில் கிடைக்காத மாணவர்கள் உள்ளனர் என்பதை அவர் அறிவாரா;

(ii) அவ்வாறான மாணவர்களுக்கு நியாயம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படுமா;

என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

11.

454/2020

கௌரவ இஷாக் ரஹுமான்,— காணி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) அனுராதபுர மாவட்டத்தின் இப்பலோகம பிரதேச செயலகப் பிரவின் 493 ஆம் இலக்க விஜிதபுர கிராம உத்தியோகத்தர் பிரிவில் தற்போதைய பிரதம அமைச்சர் கடற்றொழில் அமைச்சராக இருந்த காலத்தில் ஆரம்பிக்கப்பட்ட தியவர மீன்பிடி கிராமத்தின் தற்போதைய நிலைமையினை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி கிராமத்தின் காணிகளுக்கு உறுதிகளை வழங்குவதற்கு அடிப்படை நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி நடவடிக்கை யாதென்பதையும்;

(iii) மேற்படி காணிகளுக்கு உறுதிகள் வழங்கப்படும் திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

12.

516/2020

கௌரவ ஆர்.எம். ரஞ்சித் மத்துமபண்டார,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பிபில, மொனராகலை வீதி, 1 ஆம் மைல்கல், மடமேவத்த எனும் முகவரியில் வதியும் திருமதி. பீ.வீ. வசந்த ராணி, ஊவா மாகாண கமத்தொழில் அமைச்சிற்கு சொந்தமான பிபில அரச பண்ணையைச் சார்ந்த, மாகாண கமத்தொழில் நிறுவனத்தில் 2017 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் முதல் 2019 ஆம் ஆண்டு டிசெம்பர் வரையிலான காலப்பகுதியில் தொழிலாளர் பதவியில் பணியாற்றியுள்ளாரென்பதையும்;

(ii) மேற்படி சேவைக் காலத்திற்குள் இவர் இடையறாமல் 180 நாட்கள் பணியாற்றியுள்ளாரென்பதையும்;

(iii) 29/2019 இலக்கமுடைய பொது நிருவாக சுற்றுநிருபத்திற்கு அமைவாக இவர் நிரந்தர சேவைக்கு உரித்தினை பெற்றுள்ளாரென்பதையும்;

(iv) ஆயினும், 2020 ஆம் ஆண்டு சனவரி முதல் இவரின் சேவை இடைநிறுத்தப் பட்டுள்ளதென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) தனது தொழிலை இழக்க நேரிட்டதால் மிகவும் நிர்க்கதி நிலைக்குள்ளாகியுள்ள திருமதி வசந்த ராணியை மீண்டும் தொழிலில் அமர்த்துவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

13.

519/2020

கௌரவ சாணக்கியா ராஜபுத்திரன் இராசமாணிக்கம்,— கடற்றொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வாழைச்சேனையில் அமைந்துள்ள கடற்றொழில் துறைமுகத்தில் சாதாரண இழுவைப் படகுகளை கையாளுவதற்கான வசதிகள் உள்ள போதும் அதன் நுழைவாயில் மற்றும் ஆழம் போதுமானதாக இல்லாததால் மிகப் பெரிய இழுவைப் படகுகளை கையாளுதல் பிரச்சினையான விடயமொன்றாகி உள்ளதோடு, இதன் காரணமாக உள்நாட்டு கடற்றொழிலாளர்கள் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்துள்ளார்கள் என்பதையும்;

(ii) மேற்படி கடற்றொழில் துறைமுகத்தை விரிவாக்குவதன் தேவையொன்று உள்ளதென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) மேற்படி கடற்றொழில் துறைமுகத்தை விரிவாக்குவதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

14.

726/2020

கௌரவ பிரமித்த பண்டார தென்னகோன்,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மாத்தளை மாவட்டத்தின் லக்கல, பள்ளேகம பிரதேச செயலாளர் பிரிவில் அமைந்துள்ள லக்கல பிரதேச வைத்தியசாலையை புதிதாக நிர்மாணிப்பதற்கு அரசாங்கம் செலவிடப்பட்டுள்ள மொத்தத் தொகை யாது என்பதையும்;

(ii) மேற்படி வைத்தியசாலையில் தங்கியிருந்து சிகிச்சை பெற்றுக்கொள்ளக் கூடிய நோயாளிகளின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(iii) வைத்தியசாலைக்கு அங்கீகரிக்கப்பட்ட வைத்தியர்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(iv) தற்போது மேற்படி வைத்தியசாலையில் சேவையாற்றுகின்ற வைத்தியர்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(v) வைத்தியசாலைக்கு அங்கீகரிக்கப்பட்ட தாதியர் பணியாட்டொகுதி யாது என்பதையும்;

(vi) தற்போது மேற்படி வைத்தியசாலையில் சேவையில் ஈடுபட்டுள்ள தாதியர் பணியாட்டொகுதி யாது என்பதையும்;

(vii) தற்போது மேற்படி வைத்தியசாலையில் பேணிவரப்படுகின்ற சாய்சாலைகளின் வகைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

15.

759/2020

கௌரவ (கலாநிதி) சுரேன் ராகவன்,— வனசீவராசிகள் மற்றும் வனப்பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இன்றளவில் உத்தியோகபூர்வமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ள வட மாகாணத்தில் அமைந்துள்ள காடுகளுக்கு உரித்தான நிலப்பரப்பு யாது என்பதையும்;

(ii) 1982 ஆம் ஆண்டளவில் பிரகடனப்படுத்தப்பட்டிருந்த காடுகளுக்கு உரித்தான நிலப்பரப்பு யாது என்பதையும்;

(iii) மேற்படி நிலப்பரப்புகளுக்கு இடையில் வித்தியாசம் காணப்படுவதாயின், இந்த வித்தியாசத்துக்கான காரணம் யாது என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) தெரிவு செய்யப்படும் பிரதேசமொன்றை வன ஒதுக்குப் பிரதேசமாக வர்த்தமானியில் அறிவிக்கும் செயன்முறை யாது என்பதையும்;

(ii) 2009 ஆம் ஆண்டு முதல் இதுவரையில் வட மாகாணத்துக்கு ஏற்புடையதாக, புதிதாக வனப் பாதுகாப்புத் தொடர்பில் வெளியிடப்பட்டுள்ள வர்த்தமானி அறிவித்தல்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

## 2020 நவெம்பர் 19, வியாழக்கிழமை

# வாய்மூல விடைக்கான வினாக்கள்

1.

7/2020

கௌரவ ஹேஷா விதானகே,— பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2015 முதல் இதுவரையில் அழிக்கப்பட்டுள்ள தொல்பொருள் தளங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி தளங்களின் பெயர்கள் யாவையென்பதையும்;

(iii) மேற்படி தொல்பொருள் தளங்களை அழிப்பதற்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(iv) மேற்படி தொல்பொருள் தளங்களை அழித்த நபர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளார்களா என்பதையும்;

(v) அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள தண்டனைகள் யாவையென்பதையும்;

(vi) அழிக்கப்பட்டுள்ள, ஆனால் அதற்குப் பொறுப்புக் கூறவேண்டியவர்கள் அடையாளம் காணப்படாதுள்ள தொல்பொருள் தளங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(vii) நாட்டின் வரலாற்று பெருமையை பாதுகாக்கும் தொல்பொருள் தளங்களை அழிப்பதற்கு எதிராக எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படவுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2.

52/2020

கௌரவ சமிந்த விஜேசிறி,— தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) தற்போது வெளிநாடுகளில் உள்ள இலங்கை ஊழியர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி ஊழியர்கள் சேவையாற்றுகின்ற நாடுகளின் பெயர்கள் தனித்தனியே யாதென்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு நாட்டிலும் சேவையாற்றுகின்ற ஊழியர்களின் எண்ணிக்கை தனித்தனியே யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) கொவிட்-19 தொற்று காரணமாக பாதிக்கப்பட்டிருக்கின்ற இலங்கை ஊழியர்களின் நலநோம்புகைக்காக அமைச்சு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

(ii) அவர்களை இந்நாட்டுக்கு அழைத்துவருவதற்கு அமைச்சு மேற்கொண்டுள்ள நடவடிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3.

99/2020

கௌரவ புத்திக பத்திறண,— சுற்றாடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இலங்கையில் வில்பத்து தேசிய வனப்பூங்காவை முதன்மையாகக் கொண்ட வனப்போர்வை மனித செயற்பாடுகள் காரணமாக அழிவடைகிறது என்பதையும்;

(ii) வடமத்திய மாகாணம் ஏற்கனவே பகுதியளவில் பாலைவனமாக மாறியுள்ளது என்பதையும்;

(iii) இந்த நிலைமையானது இலங்கையின் ஒட்டுமொத்த காலநிலையினையும் பாதித்துள்ளது என்பதையும்;

(iv) ஆகையால், இலங்கையில் தொடர்ச்சியாக யாதேனும் ஒரு பிரதேசம் வெள்ளம், வறட்சி, மண்சரிவு போன்ற இயற்கை அனர்த்தங்களினால் பாதிக்கப்படுகின்றது என்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) இலங்கையில் சுற்றாடலைப் பாதுகாப்பதற்கான தேசியக் கொள்கைகளைத் தயாரிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அத்திகதி யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இலங்கையின் காலநிலை மாற்றங்கள் தொடர்பாக புத்திஜீவிகள் குழுவொன்றின் வாயிலாக ஆய்வொன்றினை மேற்கொள்வது உகந்ததென்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஈ) ஆமெனில், மேற்படி ஆய்வினை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வாரா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

4.

117/2020

கௌரவ துஷாரா இந்துனில் அமரசேன,— இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) 2015 ஆண்டு தொடக்கம் இற்றைவரை இலங்கை கிரிக்கட் நிறுவனத்தில் கடமையாற்றிய/கடமையாற்றுகின்ற ஒவ்வொரு உத்தியோகத்தரினதும் முகவரி, மாதாந்தம் செலுத்தப்படும் சம்பளம், கொடுப்பனவுகள் மற்றும் பிற சலுகைகள் தனித்தனியே யாவை என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இக்காலத்தில் இவர்கள் பெற்றுக்கொண்ட சம்பளம் மற்றும் பிற சலுகைகளுடன் ஒப்பிடும் போது, இலங்கையின் கிரிக்கட் விளையாட்டை மேம்படுத்த அவர்களது நிர்வாக காலத்தில் தவறிவிட்டனர் என்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) இலங்கையில் கிரிக்கட் விளையாட்டை மேலும் வளர்ச்சியடையச் செய்வதற்கு அமைச்சு மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவை என்பதையும் அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

5.

122/2020

கௌரவ நலின் பண்டார ஜயமஹ,— பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) பிங்கிரிய ஏற்றுமதி தயாரிப்பு வலயத்தின் உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி செய்யப்படும்போது அகற்றப்பட்ட தென்னை மரங்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) மேற்படி தென்னை மரங்கள் அகற்றப்படும்போது அவை பெற்றுக் கொடுக்கப்பட்ட தரப்பினர்கள் யாவர் என்பதையும்;

(iii) அதற்கெனப் பின்பற்றப்பட்ட செயன்முறை யாதென்பதையும்;

(iv) தென்னை மரமொன்றுக்காக வழங்கப்பட்ட விலை எவ்வளவென்பதையும்;

(v) அதன் மூலம் ஈட்டப்பட்ட பணத்தொகையானது தற்போது எந்த நிறுவனத்தின் வசமுள்ளது என்பதையும்;

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

6.

152/2020

கௌரவ எஸ்.எம். மரிக்கார்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கொழும்பு-14, சிறிமாவோ பண்டாரநாயக்க மாவத்தையில் அமைந்துள்ள புளுமெண்டல் வித்தியாலயத்தில் சுமார் 400 மாணவர்கள் கல்வி கற்பதுடன், அங்கு கழிவகற்றல் முறைமை திருத்தப்படாததன் காரணமாக சாக்கடை மூடிக்குப் பதிலாக பலகைகளினால் மூடப்பட்டுள்ளதென்பதையும்;

(ii) மேற்படி மாணவர்களுக்கு முறையான மலசலகூட வசதிகள் இல்லையென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) இது தொடர்பில் கல்வி அமைச்சு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

7.

222/2020

கௌரவ மொஹொமட் முசம்மில்,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரையிலான ஒவ்வொரு வருடத்திலும் —

(i) இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட மருந்துகளின் அளவு யாதென்பதையும்;

(ii) மேற்படி மருந்துகள் எந்தெந்த நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டன என்பதையும்;

(iii) மேற்படி மருந்துகளை இறக்குமதி செய்த கம்பெனிகள் யாவையென்பதையும்;

தனித்தனியாக அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மேற்படி காலப்பகுதியில் இலங்கைக்கு மருந்துகளை இறக்குமதி செய்வதற்காகச் செலவாகிய மொத்தத் தொகை எவ்வளவென்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

8.

307/2020

கௌரவ வேலு குமார்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கண்டி மாவட்டத்திலுள்ள தமிழ் மொழிமூல பாடசாலைகளில் இருக்கின்ற இலங்கை அதிபர் சேவைக்குரிய அலுவலர்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) அவர்களின் பெயர்கள் மற்றும் இவர்கள் இன்றளவில் கடமையாற்றும் பாடசாலைகளின் பெயர்கள் யாவை என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) கண்டி மாவட்டத்தில் —

(i) அதிபர் சேவையில் தர நியமனத்தைப் பெற்றுள்ள போதும் தரத்திற்கு ஏற்புடைய அதிபர் நியமனம் கிடைக்காத அலுவலர்களின் எண்ணிக்கை;

(ii) அதிபர் சேவையில் தகைமை இல்லாத எனினும், தமிழ் மூல பாடசாலைகளில் அதிபர்களாக நியமனம் பெற்றுள்ள அலுவலர்களின் எண்ணிக்கை;

யாதென்பதையும் அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) மேற்படி (ஆ)(ii) இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு நியமனம் பெற்றுள்ள ஆசிரியர்களின் விபரங்கள் மற்றும் இவர்கள் இன்றளவில் கடமையாற்றும் பாடசாலைகள் யாவை என்பதையும் அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

9.

434/2020

கௌரவ சாந்த பண்டார,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) டெங்கு நோய்த்தாக்கம் பல்வேறான சந்தர்ப்பங்களில் இலங்கையில் அதிகரிக்கின்றது என்பதனை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) 2019 ஆம் வருடத்தில் டெங்கு நோய் காரணமாக உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) டெங்கு நோயை ஒழிப்பதற்காக தேசிய மற்றும் பிரதேச மட்டத்தில் ஏதேனும் வேலைத்திட்டம் மேற்கொள்ளப்படுகின்றதா என்பதையும்;

(iii) பிரதேச டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டத்திற்கு இணைத்துக் கொள்ளப்பட்ட தொழிலாளர்கள் உள்ளனர் என்பதனை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(iv) அவ்வாறெனில், அவர்களது சேவையை தொடர்ச்சியாகப் பெறுவதற்கு வேலைத்திட்டம் ஏதேனும் உள்ளதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

10.

455/2020

கௌரவ இஷாக் ரஹுமான்,— வனசீவராசிகள் மற்றும் வனப் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அனுராதபுர மாவட்டத்தின் மெதவச்சிய பிரதேச செயலகப் பிரிவின் முறையே 225, 226 மற்றும் 227 ஆம் இலக்க கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் வசிக்கின்ற மக்கள் காட்டு யானைகள் அச்சுறுத்தல் காரணமாக தமது வாழ்விடங்களை கைவிட்டு வேறு பிரதேசங்களுக்கு இடம்பெயர்ந்து செல்லும் நிலைமையொன்று ஏற்பட்டுள்ளதென்பதையும்;

(ii) மேற்படி பிரிவுகளில் வசிக்கின்ற மக்கள் யானைகள் தடுப்பு வேலியொன்றை நிர்மாணித்துத் தருமாறு அதிகாரிகளை அறிவுறுத்தியுள்ள போதிலும் இதுவரை அதற்கு தீர்வு கிடைக்கவில்லை யென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) ஆமெனில், இவ்விடயம் தொடர்பாக அமைச்சு மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவை என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

11.

527/2020

கௌரவ ரோஹன பண்டார,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— ( 1 )

(அ) (i) அநுராதபுரம் மாவட்டத்தில் அமைந்துள்ள ஒவ்வொரு தேசிய பாடசாலையிலும் கல்வி சாரா பணியாட்டொகுதியில் காணப்படும் வெற்றிடங்களின் எண்ணிக்கை, உரிய பதவிப் பெயர்களுக்கு ஏற்ப வெவ்வேறாக யாது என்பதையும்;

(ii) மேற்படி வெற்றிடங்களை நிரப்புவதற்கு அமைச்சு மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

12.

546/2020

கௌரவ சந்திம வீரக்கொடி,— நீர் வழங்கல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) பத்தேகம, அம்பலாந்தோட்டை, பெந்தர-எல்பிட்டிய, கரந்தெனிய மற்றும் பலபிட்டிய ஆகிய தேர்தல் தொகுதிகளில் வசிக்கின்ற மக்கள் கடும் குடிநீர் பிரச்சினையை எதிர்கொண்டுள்ளார் என்பதையு அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி பிரச்சினைக்கு தீர்வாக பத்தேகம நீர் விநியோகத் திட்டத்தின் இரண்டாம் கட்டத்திற்கு எதிர்வரும் வரவு செலவுத் திட்டத்தின் மூலம் நிதி ஒதுக்கப்படுமா என்பதையும்;

(ii) ஆமெனில், அத் தொகை எவ்வளவென்பதையும்;

(iii) மேற்குறிப்பிட்ட பிரதேசங்களில் நிலவுகின்ற குடிநீர் பிரச்சினைக்கு தீர்வு வழங்கப்படுகின்ற திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

13.

591/2020

கௌரவ எஸ். எம். எம். முஸ்ஸாரப்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) இலங்கையில் காணப்படும் ஒரேயொரு உப கல்வி வலயம், பொத்துவில் உப கல்வி வலயம் என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி வலய அலுவலகத்தில் பணி புரிகின்ற இலங்கை கல்வி நிருவாக சேவை உத்தியோகத்தர்கள் இருவருக்கும் நிருவாகப் பொறுப்புக்கள் வழங்கப்படாமைக்கான காரணங்கள் யாவை;

(ii) முறையாக அதிகாரமளிக்கப்பட்டுள்ள உப கல்வி வலயமாகக் காணப்படுகின்ற போதிலும், இவ்விதம் உத்தியோகத்தர்கள் புறக்கணிக்கப்படுவதை ஏற்றுக்கொள்ள முடியுமா;

(iii) இந்த நிலைமை காரணமாக, பொத்துவில் பிரிவினைச் சேர்ந்த ஆசிரியர்களுக்கு சிறியதொரு கடமையின் நிமித்தமும் அக்கரைப்பற்று வலய அலுவலகத்திற்குச் செல்ல வேண்டியுள்ளமையினால், இப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு எடுக்கப்படும் நடவடிக்கை யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) பொத்துவிலில் உள்ள சகல பாடசாலைகளையும் ஒருங்கிணைத்து பொத்துவில் பிரதேசத்திற்குத் தனியானதொரு கல்வி வலயத்தை தாபிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்வாரா;

(ii) ஆமெனில், அது தாபிக்கப்படும் திகதி யாது;

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) பல்வித இனங்களையும் ஒன்றிணைத்தல் அரசாங்கத்தின் நோக்கமாகவுள்ள போதிலும், முஸ்லிம் பாடசாலைகள் அக்கரைப்பற்று வலயத்துடனும், தமிழ் பாடசாலைகள் திருக்கோவில் வலயத்துடனும், சிங்களப் பாடசாலைகள் அம்பாறை வலயத்துடனும் வெவ்வேறாக ஒருங்கிணைக்கப்பட்டுள்ளமையினை அவர் அறிவாரா?

(உ) இன்றேல், ஏன்?

14.

711/2020

கௌரவ பீ.வை.ஜீ. ரத்னசேக்கர,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் தற்போது இயங்குகின்ற முன்பள்ளிகளின் எண்ணிக்கை யாது;

(ii) தற்போது மூடப்பட்டுள்ள முன்பள்ளிகளின் எண்ணிக்கை யாது;

(iii) முன்பள்ளிகளின் வசதிகளை அதிகரிப்பதற்கு அரசாங்கம் மேற்கொள்ள உத்தேசித்துள்ள நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) முன்பள்ளி ஆசிரியர்களுக்கு சம்பளம் அல்லது கொடுப்பனவினை வழங்குவதிலான முறையான செயன்முறையொன்று காணப்படுகின்றதா;

(ii) முன்பள்ளி ஆசிரியர்களை இலங்கை ஆசிரியர் சேவையில் அல்லது அதற்கு நிகரான பிறிதொரு ஒருங்கிணைந்த சேவையில் உள்ளீர்ப்பதற்கான வேலைத்திட்டமொன்று உள்ளதா;

(iii) முன்பள்ளி ஆசிரியர்களின் ஆட்சேர்ப்பு மற்றும் அவர்களது தகைமைகளைத் தீர்மானித்தல் தொடர்பில் குறிப்பிட்டதொரு ஒழுங்குமுறைப்படுத்தும் செயன்முறை காணப்படுகின்றதா;

(iv) முன்பள்ளிகளில் கல்வி பயிலும் பிள்ளைகளிடமிருந்து அறவிடப்படும் கட்டணங்களை ஒழுங்குமுறைப்படுத்தும் செயன்முறையொன்று உள்ளதா;

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) முன்பள்ளிகளின் கல்வியை முறைப்படுத்துவதற்காக நடைமுறைப்படுத்த உத்தேசித்துள்ள புதிய பிரேரணைகள் யாவை என்பதை அவர் மேலும் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

15.

727/2020

கௌரவ பிரமித்த பண்டார தென்னகோன்,— பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) அப்போதைக்கு அதிகாரத்திலிருந்த சனாதிபதியினால் 2013 சனவரி மாதம் 15 ஆம் திகதி பிரதம நீதியரசர் பதவிக்கு, அரசியலமைப்புக்கு அமைவாக நியமிக்கப்பட்ட திரு. மொஹான் பீரிஸின் நியமனமானது பின்னர் இரத்துச் செய்யப்பட்டு வலுவிழக்கச் செய்யப்பட்டது என்பதை அவர் அறிவாரா?

(ஆ) திரு. மொஹான் பீரிஸின் பிரதம நீதியரசர் பதவிக்கான நியமனம் யாரால் இரத்துச் செய்யப்பட்டு வலுவிழக்கச் செய்யப்பட்டது என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

## 2020 நவெம்பர் 20, வெள்ளிக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1.

19/2020

கௌரவ ஹேஷா விதானகே,— பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை விமானப்படையானது 2014 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் ரேடார் ரிசீவரொன்றையும் அன்டெனா ஸ்கேனரொன்றையும் திருத்துவதற்காக சீனாவுக்கு அனுப்பியுள்ளது என்பதையும்;

(ii) மேற்படி பொருட்கள் காணாமல் போயுள்ளன என்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) மேற்படி பொருட்களை ஏற்றிச் செல்வதற்கு பொறுப்பேற்றிருந்த கம்பனி யாது;

(ii) மேற்படி கம்பனியின் பணிப்பாளர் சபை அங்கத்தவர்கள் யாவர்;

(iii) மேற்படி கம்பனியானது தற்போதும் இலங்கையில் ஏதேனுமோர் அரச நிறுவனத்துக்கு சேவை வழங்குகின்றதா;

(iv) மேற்படி பொருட்கள் காணாமற் போனமையால் ஏற்பட்டுள்ள நட்டம் யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2.

65/2020

கௌரவ சமிந்த விஜேசிறி,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையிலுள்ள தேசிய பாடசாலைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) இப்பாடசாலைகளின் பெயர்கள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) தேசிய பாடசாலையொன்றில் அதிபர் பதவியை வகிப்பதற்கு கொண்டிருக்க வேண்டிய தகைமைகள் யாவையென்பதையும்;

(ii) அதற்கமைவாக உரிய தகைமைகளைக் கொண்டுள்ள அதிபர்கள் பதவிவகிக்கும் பாடசாலைகளின் எண்ணிக்கை மற்றும் அவற்றின் பெயர்கள் யாவையென்பதையும்;

(iii) அவ்வாறு உரிய தகைமைகளை பூர்த்தி செய்திராத அதிபர்கள் பதவிவகிக்கும் பாடசாலைகளின் எண்ணிக்கை மற்றும் அவற்றின் பெயர்கள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) அனைத்து தேசிய பாடசாலைகளுக்கும் உரிய தகைமைகளைக் கொண்ட அதிபர்களை நியமிப்பதற்கு அமைச்சு மேற்கொள்ளும் நடவடிக்கை யாதென்பதையும் அவர் மேலும் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

3.

109/2020

கௌரவ புத்திக பத்திறண,— போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015.01.01 ஆம் திகதி தொடக்கம் 2019.12.31 ஆம் திகதி வரை இறக்குமதி செய்யப்பட்ட புகையிரதப் பெட்டிகள், புகையிரத எஞ்சின்கள் மற்றும் இயக்கு வலுத் தொகுதிகளின் எண்ணிக்கை;

(ii) அதற்காக செலவிடப்பட்ட தொகை;

வெவ்வேறாக எவ்வளவென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இவ்வாறு இறக்குமதி செய்யப்பட்ட புகையிரதப் பெட்டிகள், புகையிரத எஞ்சின்கள் மற்றும் இயக்கு வலுத் தொகுதிகளில் சில இலங்கையில் ஓட்டத்தில் ஈடுபடுத்த பொருத்தமற்றவை என்பதை அவர்அறிவாரா?

(இ) (i) ஆமெனின், புகையிரதப் பெட்டிகள், புகையிரத எஞ்சின்கள் மற்றும் இயக்கு வலுத் தொகுதிகள் என்பவற்றை இந்நாட்டுக்கு இறக்குமதி செய்வதற்கான செயற்பாடு சார்பாக நியமிக்கப்பட்ட கேள்விப்பத்திர மற்றும் தொழில்நுட்பக் குழுக்களின் அங்கத்தவர்களின் பெயர்கள் மற்றும் பதவிகள்;

(ii) அவர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள்;

வெவ்வேறாக யாவையென்பதையும் அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) (i) இலங்கையில் புகையிரதப் பெட்டிகள் தயாரிப்பு ஆரம்பிக்கப்படும் திகதி யாதென்பதையும்;

(ii) அதன் பிரகாரம், அரசாங்கத்தினால் சேமித்துக்கொள்ளக்கூடிய தொகை எவ்வளவு;

என்பதையும் மேலும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

4.

164/2020

கௌரவ எஸ்.எம். மரிக்கார்,— பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) 2020 ஆம் ஆண்டு முதல் 2024 ஆம் ஆண்டு வரை அரசாங்கம் செலுத்த வேண்டியுள்ள உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுக் கடன் தொகைகள் வருட வாரியாக தனித்தனியே எவ்வளவென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மேற்படி கடன் பெற்றுக்கொள்ளப்பட்ட திகதி மற்றும் கருத்திட்டங்கள் யாவை என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) மேற்படி கடன் தொகைகளுக்கான தவணைப்பணம் செலுத்துவதற்காக அரசாங்கம் தயார் செய்துள்ள வேலைத்திட்டம் யாதென்பதை அவர் மேலும் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

5.

223/2020

கௌரவ மொஹொமட் முசம்மில்,— பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரையிலான ஒவ்வொரு வருடத்திலும் —

(i) இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட சீமெந்தின் அளவு யாதென்பதையும்;

(ii) மேற்படி சீமெந்து எந்தெந்த நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டன என்பதையும்;

(iii) மேற்படி சீமெந்தினை இறக்குமதி செய்த கம்பெனிகள் யாவையென்பதையும்;

தனித்தனியாக அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மேற்படி காலப்பகுதியில் இலங்கைக்கு சீமெந்தினை இறக்குமதி செய்வதற்காகச் செலவாகிய மொத்தத் தொகை எவ்வளவென்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

6.

435/2020

கௌரவ சாந்த பண்டார,— பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) நாளொன்றில் பெருமளவிலான வீதி விபத்துக்கள் இடம்பெறுகின்றன என்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) மேற்படி வீதி விபத்துக்களின் மூலம் நாளொன்றில் உயிரிழப்பவர்களின் எண்ணிக்கை அண்ணளவாக எத்தனை என்பதையும்;

(ii) 2018 மற்றும் 2019 ஆகிய வருடங்களில் வீதி விபத்துக்களினால் மரணித்தவர்களின் எண்ணிக்கை தனித்தனியாக எத்தனை என்பதையும்;

(iii) வீதி விபத்துக்களைக் குறைப்பதற்காக இலங்கைப் பொலிஸிடமுள்ள வேலைத்திட்டம் யாதென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) (i) வீதி விபத்துக்களைக் குறைத்தல் பற்றிய பாராளுமன்றத் தெரிகுழுவொன்று நியமிக்கப்பட்டிருந்தது என்பதையும்;

(ii) குறித்த தெரிவுக் குழுவினால் வழங்கப்பட்டுள்ள விதப்புரைகள் மற்றும் தீர்மானங்கள் கருத்திற்கொள்ளப்பட்டுள்ளனவா என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

7.

448/2020

கௌரவ (டாக்டர்) கவிந்த ஹேஷான் ஜயவர்தன,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் தற்பொழுது நடைமுறையிலுள்ள மத்ரஸா பாடசாலைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி பாடசாலைகள் அமைந்துள்ள இடங்களின் முகவரிகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) 2019 ஆம் ஆண்டு உயிர்த்த ஞாயிறன்று இடம்பெற்ற தாக்குதல்களையடுத்து, மத்ரஸா பாடசாலைகள் தொடர்பில் சமூகத்தில் பெருமளவு பேசப்படுகின்றது என்பதை அவர் அறிவாரா?

(இ) (i) மேற்படி மத்ரஸா பாடசாலைகளை ஒழுங்குபடுத்துவதற்கு அமைச்சினால் எடுக்கப்படவுள்ள நடவடிக்கைகளையும்;

(ii) இப்பாடசாலைகள் தொடர்பாக தற்போதைய அரசாங்கத்தின் நிலைப்பாட்டினையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

8.

456/2020

கௌரவ இஷாக் ரஹுமான்,— நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) அனுராதபுர மாவட்டத்தில் அமைந்துள்ள கலாவெவ நீர்த்தேக்கத்திலிருந்து திசாவெவ நீர்த்தேக்கம் வரை நீரை கொண்டுச் செல்லும் பழைய யோத கால்வாய் தூர்ந்து போயுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி கால்வாயைச் சுத்திகரித்து இயல்பு நிலைக்கு கொண்டு வருவதற்கு வேலைத்திட்டமொன்று உண்டா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி வேலைத்திட்டம் யாதென்பதையும்;

(iii) மேற்படி வேலைத்திட்டம் தொடங்கப்படும் திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

9.

478/2020

கௌரவ திலிப் வெதஆரச்சி,— கடற்றொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு முதல் 2020 ஆம் ஆண்டு வரை இலங்கையில் ஆரம்பிக்கப்பட்டுள்ள மீன்பிடித் துறைமுகங்களின் எண்ணிக்கை;

(ii) இவற்றில் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ள மீன்பிடித் துறைமுகங்களின் எண்ணிக்கை;

(iii) புதிதாக நிர்மாணிப்பதற்கு உத்தேசித்துள்ள மீன்பிடித் துறைமுகங்களின் எண்ணிக்கை;

யாவையென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) அம்பாந்தோட்டை மாவட்டத்தில் அமைந்துள்ள மாவெல்ல நங்கூரத் தளம், ரெக்கவ நங்கூரத்தளம், அம்பாந்தோட்டை மீன்பிடித் துறைமுகம் மற்றும் கந்தர மீன்பிடித் துறைமுகங்களின் தற்போதைய நிலைமை யாதென்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

10.

520/2020

கௌரவ சாணக்கியா ராஜபுத்திரன் இராசமாணிக்கம்,— கடற்றொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) புன்னைக்குடா, கோட்டைக்கல்லாறு ஆகிய பிரதேசங்களுக்கு முகத்துவார வாயில்களை (Bay Mouth Gates) நிர்மாணித்து படகுகளை நிறுத்தி வைப்பதற்கு வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதன் மூலமாக பல உள்ளூர் கடற்றொழிலாளர்கள் பயன்களைப் பெற்றுக்கொள்ள முடியுமென்பதை அவர் அறிவாரா?

(ஆ) ஆமெனில், அப்பிரதேசங்களில் முகத்துவார வாயில்களை நிர்மாணிப்பதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

11.

529/2020

கௌரவ ரோஹன பண்டார,— பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அநுராதபுரம் மாவட்டத்தில் உள்ள கிராம அலுவலர் பிரிவுகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(ii) அவற்றின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) அக் கிராம அலுவலர் பிரிவுகளுள் தற்போது நிரந்தர கிராம அலுவலர்கள் காணப்படும் பிரிவுகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(iv) நிரந்தர கிராம அலுவலர்கள் இல்லாத பிரிவுகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) நிரந்தர கிராம அலுவலர்கள் இல்லாத பிரிவுகளில் நிலவும் கிராம அலுவலர் வெற்றிடங்களை நிரப்புவதற்கு அமைச்சு மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவை என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

12.

542/2020

கௌரவ சமன்பிரிய ஹேரத்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) (கலாநிதி) சீ. டப்ளியூ. டப்ளியூ. கன்னங்கரவினால் ஆரம்பிக்கப்பட்ட மத்திய கல்லூரிகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி மத்திய கல்லூரிகளுக்கு தரம் 6 மாணவர்களைச் சேர்த்துக் கொள்ளும் வழிமுறை யாதென்தையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (கலாநிதி) சீ.டப்ளியூ.டப்ளியூ. கன்னங்கரவினால் ஆரம்பிக்கப்பட்ட மத்திய கல்லூரியொன்று குளியாப்பிட்டி தேர்தல் தொகுதியில் அமைந்துள்ளது என்பதை அவர் அறிவாரா?

(இ) (i) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2018 ஆம் ஆண்டு வரையான காலத்தில், மேற்படி (ஆ) இல் குறிப்பிடப்பட்டுள்ள கல்லூரியில் 6 ஆம் தரத்திற்கென சேர்த்துக்கொள்ளப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) சேர்த்துக்கொள்ளப்பட்ட ஒவ்வொரு மாணவரும் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் பெற்றுக்கொண்டுள்ள புள்ளிகள் தனித்தனியாக எவ்வளவு என்பதையும்;

(iii) மேற்படி கல்லூரிக்கு புலமைப் பரிசில் பரீட்சையின் வெட்டுப் புள்ளிகளை விட குறைவான புள்ளிகளைப் பெற்ற எத்தனை மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளனர் என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

13.

557/2020

கௌரவ சந்திம வீரக்கொடி,— இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ஈட்டி எறிந்து மீன்பிடிக்கும் விளையாட்டில் ஈடுபடுவதற்காக ஏராளமான வெளிநாட்டு உல்லாசப் பிரயாணிகள் இலங்கைக்கு வருகை தருகின்றார்கள் என்பதையும்;

(ii) ஒலிம்பிக் விளையாட்டுகளில் ஒன்றாக உள்ள மேற்படி விளையாட்டினை இலங்கையில் மேற்கொள்ள முடியாதவாறு சட்டங்கள் இயற்றப்பட்டுள்ளதென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) இலங்கைக்கு வருகின்ற வெளிநாட்டு உல்லாசப் பிரயாணிகளுக்கு மீள மேற்படி விளையாட்டில் ஈடுபடுவதற்கேற்றவாறு மேற்குறிப்பிட்ட சட்டங்களில் திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

14.

653/2020

கௌரவ (கலாநிதி) ஹர்ஷ த சில்வா,— வனசீவராசிகள் மற்றும் வனப்பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) அம்பாந்தோட்டை எல்லல வன ஒதுக்கம், ஹொரொவப்பத்தான ரத்மலே வன ஒதுக்கம், மற்றும் மஹதிவுல்வெவ அன்டியாஹின்ன வன ஒதுக்கம் உள்ளிட்ட சில வன ஒதுக்கங்களில் காடழிப்புகள் இடம்பெற்றுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) ஆமெனில், மேற்படி காடழிப்புகளை மேற்கொண்ட ஆட்களுக்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி வன ஒதுக்கங்களில் அழிக்கப்பட்டுள்ள வன நிலப்பரப்பின் அளவு ஹெக்டெயர்களில் எவ்வளவென்பதையும்;

(iii) இன்றளவில் காடழிப்பு ஓர் அலையாக நாடு முழுவதும் விரிவடைவதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

15.

728/2020

கௌரவ பிரமித்த பண்டார தென்னகோன்,— நீர் வழங்கல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மாத்தளை மாவட்டத்தின் வில்கமுவ பிரதேச செயலாளர் பிரிவில் அமைந்துள்ள ஹீங்கங்கை குடிநீர் திட்டத்தின் வேலைகள் ஆரம்பிக்கப்பட்ட திகதி யாது என்பதையும்;

(ii) மேற்படி திட்டத்தில் உடன்படிக்கை செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தக்காரர்கள் யார் என்பதையும்;

(iii) மேற்படி திட்டத்துக்கு ஒதுக்கப்பட்ட நிதி ஏற்பாடுகளின் அளவு யாது என்பதையும்;

(iv) உடன்படிக்கையின் பிரகாரம் இத்திட்டத்தின் வேலைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டிய திகதி யாது என்பதையும்;

(v) உரிய திகதியில் இத்திட்டத்தின் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளனவா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

## 2021 சனவரி 08, வெள்ளிக்கிழமை

## பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

1.

பா. 1/2020

கௌரவ ஹேஷா விதானகே,— கிராமியப் பிரதேசங்களில் பௌத்த விஹாரைகளில் தங்கியிருக்கும் வயோதிப பிக்குமார்களைப் பாதுகாத்தல்,— இலங்கையின் அநேகமான கிராமியப் பிரதேசங்களில் பௌத்த விஹாரைகள் மிகக் குறைந்த பொருளாதார நிலையிலுள்ளதால், அத்தகைய விஹாரைகளில் தங்கியிருக்கும் வயோதிப பிக்குமார்களைப் பாதுகாப்பதற்கான நிகழ்ச்சித்திட்டமொன்று தயாரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

2.

பா. 2/2020

கௌரவ ஹேஷா விதானகே,— பிராந்திய ஊடகவியலாளர்களின் தொழில்கள் பிரச்சினைகளைத் தீர்த்தல்,— ஒரு நாட்டின் அபிவிருத்திக்கு தகவல்கள் முக்கிய காரணிகளாக இருப்பதுடன் இவ்வாறான தகவல்களை அளிப்பதில் முக்கிய பங்காற்றி வரும் பிராந்திய ஊடகவியலாளர்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான பொறிமுறை ஒன்று அரசாங்கத்தினால் தாபிக்கப்படல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

3.

பா. 3/2020

கௌரவ ஹேஷா விதானகே,— ஆற்றுப்பள்ளத்தாக்குகளிலிருந்து உச்ச பயன் பெறுதல்,— ஒரு விவசாய நாடான எமது நாட்டின் ஆற்றுப்பள்ளத்தாக்குகளிலிருந்து விவசாய கைத்தொழிலுக்கு பாரிய சேவையாற்றப்படுகின்ற போதிலும், இந்த ஆற்று நீர் பாரியளவு பயன்படுத்தப்படாது கடலுடன் கலப்பதாக அறிவியல்சார் ஆராய்ச்சிகள் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளமையால், மகா பராக்கிரமபாகு மன்னனுடைய காலத்தைப் போன்று இந்த நீர் வளத்தைக் கொண்டு நாட்டின் அபிவிருத்திக்கு உச்ச பயன் பெறக்கூடியவாறு வேலைத்திட்டமொன்று அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

4.

பா. 4/2020

கௌரவ ஹேஷா விதானகே,— புகையிரதம் மூலம் காய்கறிகளை எடுத்துச் செல்லல்,— பதுளை மாவட்டம் உள்ளிட்ட காய்கறி உற்பத்தி செய்யப்படும் மாவட்டங்களிலிருந்து காய்கறி உற்பத்தியாளர்களின் உற்பத்திகளை குறைந்த செலவிலும் விரயத்தினை இயன்றளவு குறைக்கும் வகையிலும் புகையிரதம் மூலமாக நாட்டின் ஏனைய பிரதேசங்களுக்கு எடுத்து செல்வதற்கான திட்டமொன்று அரசாங்கத்தினால் ஆரம்பிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

5.

பா. 5/2020

கௌரவ ஹேஷா விதானகே,— இரத்தினபுரி மாவட்டத்தில் வெள்ளப் பெருக்கைக் கட்டுப்படுத்தல்,— பாதகமான காலநிலை காரணமாக தொடர்ச்சியாக வெள்ளப் பெருக்கினால் அனர்த்தத்துக்கு உட்படும் இரத்தினபுரி மாவட்டத்தின் வெள்ளப்பெருக்கை கட்டுப்படுத்துவதற்குப் பொருத்தமான வேலைத்திட்டமொன்று அரசாங்கத்தினால் தயார் செய்யப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

6.

பா. 6/2020

கௌரவ ஹேஷா விதானகே,— எதிர்கால சந்ததியினருக்காக சப்ரகமுவாவுக்குத் தனித்துவமான மரபுரிமைகளைப் பாதுகாத்தல்,— கலை, விளையாட்டு போன்ற பல்வேறு துறைகளில் சப்ரகமுவாவுக்கு உரித்தான தனித்துவமிக்க பண்புகள் காணப்படுவதுடன், இன்று வர்த்தகமயமாக்கல் காரணமாக மேற்படி தனித்துவமிக்க பண்புகள் அழிவடைகின்ற அச்சுறுத்தல் காணப்படுவதனால் எதிர்கால சந்ததியினருக்காக சப்ரகமுவாவுக்கு தனித்துவமிக்க மரபுரிமைகளை பாதுகாக்கும் நிகழ்ச்சித்திட்டமொன்றை தயார் செய்ய வேண்டுமென்று இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

7.

பா. 7/2020

கௌரவ ஹேஷா விதானகே,— இரத்தினபுரி மாவட்டத்தில் இயற்கை அனர்த்தங்களைக் குறைத்தல்,— தேசிய கட்டிட ஆராய்ச்சி அமைப்பினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கைகளுக்கு அமைய இரத்தினபுரி மாவட்டத்தில் இயற்கை அனர்த்தங்களுக்கு உட்படுகின்ற அச்சுறுத்தலைக் கொண்ட பல இடங்கள் காணப்படுவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளதனால் மேற்படி நிலைமைகளை குறைப்பதற்கான நிகழ்ச்சித்திட்டமொன்று அரசாங்கத்தினால் தயார்செய்யப்பட வேண்டுமென்று இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

8.

பா. 8/2020

கௌரவ ஹேஷா விதானகே,— இணையத் தளங்களில் ஆபாச காணொளிகள் உலாவுவதைத் தடுத்தல்,— தற்போது அதிகளவில் இணையத் தளங்கள் ஊடாக பல்வேறு ஆபாச காணொளிக் காட்சிகள் உலாவுவதன் மூலம் ஆட்களின் அந்தரங்கத்துக்கு பாதிப்பேற்படுவதோடு குறிப்பாக பெண்கள் அதன் மூலம் பெரும் அசௌகரியங்களை எதிர்கொள்வதால், இவ்வாறான காணொளிக் காட்சிகளை தன் வசம் வைத்துள்ள, விநியோகிக்கின்ற மற்றும் உருவாக்குகின்ற ஆட்கள் தொடர்பாக புலனாய்வு செய்வதற்கு பயன்மிக்க சிறப்பு பிரிவொன்று குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினுள் தாபிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

9.

பா. 9/2020

கௌரவ ஹேஷா விதானகே,— அறநெறிப் பாடசாலைக் கல்வியை கட்டாயப்படுத்தல்,— நாகரீகமான ஒரு சமூகத்துக்கு ஒவ்வாத வகையில் நாட்டினுள் பரவி வருகின்ற குற்றச் செயல்கள் மற்றும் சிறுவர் குற்றச்செயல்களை ஒழிப்பதற்கும் சுய ஒழுக்கக் கட்டுப்பாட்டை ஏற்படுத்துவதற்குமாக சகல பிள்ளைகளுக்கும் (11 ஆம் தரம் வரை) அவர்களது சமயங்களின் அடிப்படையில் அறநெறிப் பாடசாலைக் கல்வியைக் கட்டாயப்படுத்தல் உகந்ததென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது

10.

பா. 10/2020

கௌரவ ஹேஷா விதானகே,— இலங்கையில் சகல தமிழ் மொழிமூல பாடசாலைகளிலும் சிங்கள மொழியில் கற்பித்தல்,— தேசிய நல்லிணக்கத்தையும் மற்றும் இனங்களுக்கிடையே பரஸ்பர புரிந்துணர்வையும் ஒற்றுமையையும் மேலும் பயனுறுதியான விதத்தில் கட்டியெழுப்புவதற்கான நீண்டகால இலக்குகளுக்கு அடியெடுத்து வைக்கும் நோக்கத்துடன், இலங்கையில் சகல தமிழ் மொழிமூல பாடசாலைகளிலும் சிங்கள மொழியில் கற்பிக்கும் பிரிவொன்று தாபிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

11.

பா. 11/ 2020

கௌரவ புத்திக பத்திறண,— மன்னன் இராவணன் தொடர்பாக முறைசார்ந்த ஆய்வொன்றை மேற்கொள்ளல்,— மன்னன் இராவணன் தொடர்பாக உறுதியான வரலாற்றுச் சான்றுகள் இல்லாத போதிலும், முறைசார்ந்த ஆய்வொன்றின் மூலம் அவர் தொடர்பாக நாட்டு மக்களின் மனப்பாங்கினை மேம்படுத்துவதற்கும் மன்னன் இராவணனுக்கு இருந்த அறிவினை நாட்டின் அபிவிருத்திக்கு பயன்படுத்துவதற்கும், இலங்கை வரலாற்றில் மறைந்துபோயுள்ள அத்தியாயமொன்றை வெளிக்கொண்டு வருவதற்கும் இயலுமாயுள்ளதால் புத்திஜீவிகள் குழுவொன்றின் மூலம் மன்னன் இராவணன் தொடர்பான ஆய்வொன்று மேற்கொள்ளப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

12.

பா.12/2020

கௌரவ புத்திக பத்திறண,— இலங்கைக்குத் தேவையான சீனியை நாட்டினுள்ளேயே உற்பத்தி செய்தல்,— சீனியை உற்பத்தி செய்வதற்குத் தேவையான வளங்களை இலங்கை தன்னகத்தே கொண்டிருப்பதால், சிறந்த முகாமைத்துவத்துடன், வினைத்திறனாகவும் திட்டமிட்ட வகையிலும் செயலாற்றி நாட்டுக்குத் தேவையான சீனியை உள்நாட்டில் உற்பத்தி செய்வதற்கும், சுத்திகரிப்பதற்கும் தேவையான தொழிற்சாலைகளை அரசாங்கம் தாபித்து சீனிக் கைத்தொழிற் துறையை பாதுகாத்தல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

13.

பா. 13/ 2020

கௌரவ புத்திக பத்திறண,— 60 வயதைத் தாண்டியுள்ளவர்களை சமூகத்தில் முனைப்பான நபர்களாக ஆக்குகின்ற வேலைத்திட்டமொன்றை தயாரித்தல்,— சமூக, பொருளாதார செயற்பாட்டின் முன்னேற்றத்திற்காக தமது உழைப்பை அர்ப்பணித்து, 60 வயதைத் தாண்டிய பின்னர் சமூகத்தில் முறையான அங்கீகாரம் இன்றி செயலிழந்து ஓரங்கட்டப்பட்டுள்ள முதியவர்களை, சமூகத்தின் முனைப்பான நபர்களாக ஆக்குவதற்கான வேலைத்திட்டமொன்றைத் தயாரிப்பதற்காக பாடசாலை சமுதாயம் உள்ளிட்ட முழுச் சமூகத்தையும் விழிப்புணர்வூட்டுகின்ற முறையியலொன்று உருவாக்கப்படுதல் வேண்டுமென இப் பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

14.

பா. 14/ 2020

கௌரவ புத்திக பத்திறண,— மோட்டார் வாகன தொழில்நுட்பத் துறை தொடர்பில் பாடசாலை மாணவர்களின் அறிவை வளர்த்தல்,— இலங்கையின் எதிர்கால இளைஞர், யுவதிகளின் வேலைவாய்ப்புப் பிரச்சினைக்கான ஒரு தீர்வாகவும், மோட்டார் வாகன தொழில்நுட்பத் துறையில் ஏற்படும் வளர்ச்சிக்கு ஒப்பீட்டளவில் பயிற்றப்பட்ட ஊழியர்களின் தேவையைப் பூர்த்தி செய்யும் நோக்கத்துடனும் பாடசாலை பாடத் திட்டத்தில் மோட்டார் வாகன தொழில்நுட்பத்தை ஒரு பாடமாக உள்ளடக்குவதற்கான முறைசார்ந்த வேலைத் திட்டமொன்று ஏற்படுத்தப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

15.

பா. 15/ 2020

கௌரவ புத்திக பத்திறண,— முச்சக்கர வண்டி மற்றும் மோட்டார் சைக்கிள் சார்ந்த தொழிலில் ஈடுபடுபவர்களின் தொழில் பாதுகாப்பினை உறுதிசெய்தல்,— முச்சக்கர வண்டி மற்றும் மோட்டார் சைக்கிள் சார்ந்த நேரடி மற்றும் மறைமுக தொழில்களில் ஈடுபடுவதற்கு விருப்பம் கொண்டுள்ள இலங்கையில் வாழும் இளைஞர்கள், ஓய்வுபெற்ற முப்படை உத்தியோகத்தர்கள் மற்றும் மூத்த பிரஜைகள் ஆகிய சமூக குழுக்களின் பொருளாதார பலத்தை மேம்படுத்துவதன் மூலம் மொத்தத் தேசிய உற்பத்திக்கு அவர்களது பங்களிப்பை பெற்றுக் கொள்ளும் நோக்கத்துடன் குறித்த துறையில் ஈடுபட்டுள்ளவர்களது முனைப்புடனான பங்களிப்பை தேசிய பொருளாதாரத்திற்கு பெற்றுக் கொள்வதற்கான முறைசார்ந்த வேலைத்திட்டமொன்று விரைவாக தயாரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

16.

பா. 16/ 2020

கௌரவ புத்திக பத்திறண,— மோட்டார் வாகன தொழில்நுட்பக் கல்வி பாடத் திட்டங்களை இற்றைப்படுத்தல்,— மோட்டார் வாகன தொழில்நுட்பத் துறையுடன் தொடர்புடைய அரசாங்க தொழில்நுட்பக் கல்லூரிகள் மற்றும் அதனுடன் இணைந்த நிறுவனங்களில் கற்பித்தல் நடவடிக்கைகள் 25-30 வருடங்கள் பழமையான பாடத் திட்டங்களின் கீழேயே நடைபெறுவதால், அந்நிலைமையை மாற்றியமைக்கும் பொருட்டு மேற்படி பாடத் திட்டங்களை இற்றைப்படுத்துவதற்கு முறைசார்ந்த வேலைத்திட்டமொன்று வகுக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

17.

பா. 17/ 2020

கௌரவ புத்திக பத்திறண,— மோட்டார் வாகன தொழில்நுட்பக் கல்வியை கற்பிப்பதற்கான ஆசிரியர்களை பயிற்றுவிப்பதற்கு கல்வியியற் கல்லூரியொன்றை தாபித்தல்,— இலங்கையிலும் வெளிநாடுகளிலும் மோட்டார் வாகன தொழில்நுட்பத் துறையில் ஏற்படக்கூடிய வளர்ச்சிக்கேற்ப மேற்படி துறையில் பயிற்றப்பட்ட ஊழியர்களின் தேவையை பூர்த்தி செய்வதற்கேற்ற வகையில் பாடசாலை மட்டத்தில் அதனை கற்பிப்பதற்கான ஆசிரியர்களை பயிற்றுவிப்பதற்கு மோட்டார் வாகன தொழில்நுட்பத்துறை தொடர்பாக கல்வியியற் கல்லூரியொன்று தாபிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

18.

பா. 18/2020

கௌரவ புத்திக பத்திறண,— முதியோர் சமூகம் இலங்கையின் பொருளாதார வளர்ச்சியில் பங்கேற்கச் செய்வதற்கு கடன் வழங்கும் வேலைத்திட்டமொன்றைத் தயார் செய்தல்,— 60 வயதைத் தாண்டியுள்ள முதியோர் சமுதாயத்தினரின் வாழ்வாதார வழிமுறைகளை வலுவூட்டி இலங்கையின் ஒட்டு மொத்த பொருளாதார வளர்ச்சியில் பங்கேற்கச் செய்வதற்கு வங்கி முறைமையின் ஊடாக கடன் வழங்கும் முறையியல் ஒன்று அமுல்படுத்தப்படாமையானது அவர்கள் சமூகத்தினுள் வித்தியாசமாகக் கவனிக்கப்படுவதாகும் என்பதால் அத்தகைய அநீதியான நிலைமையைத் தடுப்பதற்கு முறைசார்ந்த வேலைத் திட்டமொன்று உருவாக்கப்படுதல் வேண்டுமென இப் பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

19.

பா. 19/2020

கௌரவ சமிந்த விஜேசிறி,— வெளிநாட்டில் பணிபுரியும் ஊழியர்களுக்கு நலனோம்புகை வசதிகளை வழங்குதல்,— இலங்கைக்கு ஆகக்கூடிய அந்நியச் செலாவணியை ஈட்டித்தருவதில் பங்களிப்புச் செய்கின்ற வெளிநாட்டில் பணிபுரியும் ஊழியர்களின் குடும்பங்களின் நலனோம்புகைக்காக துரித நிகழ்ச்சித்திட்டமொன்றை ஆரம்பிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

20.

பா. 20/2020

கௌரவ சமிந்த விஜேசிறி,— புகையிரதப் பெட்டிகளை உள்நாட்டில் உற்பத்தி செய்தல்,— புகையிரதத் திணைக்களம் பெருமளவு பௌதீக வளங்களையும் மனித வளங்களையும் கொண்டதொரு திணைக்களமாக இருப்பதாலும், இந்நாட்டிற்கு புகையிரதப் பெட்டிகள் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும்போது பெருந்தொகையான பணம் வெளிநாடுகளைச் சென்றடைவதாலும், இந்நிலையைத் தடுப்பதற்கு புகையிரதப் பெட்டிகளை இந்நாட்டில் உற்பத்தி செய்வதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

21.

பா. 21/2020

கௌரவ வேலு குமார்,— இலங்கையின் தபால் சேவையினை பெருந்தோட்டத் துறையில் ஒழுங்குமுறைப்படுத்துதல்,— இலங்கையினுள் தபால் சேவையானது விரிவாக்கப்பட்டிருப்பினும் இன்றளவிலும் பெருந்தோட்டத் துறையில் பணியாற்றுகின்ற மக்களுக்கான தபால் சேவைகள் ஒழுங்குமுறைப்படுத்தப்படாததால் அவர்கள் பலவிதமான சிரமங்களை எதிர்நோக்கியுள்ளதாலும், சுமார் நூற்றி ஐம்பது வருடங்கள் பெருந்தோட்டத் துறையில் பணியாற்றுகின்ற மேற்படி மக்களுக்கான தபால் சேவையினை ஒழுங்குமுறைப்படுத்துவதற்கு அரசாங்கம் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

22.

பா. 22/2020

கௌரவ வேலு குமார்,— மத்திய மாகாணத்தில் வனச் செய்கையை விருத்தி செய்தல்,— இலங்கையிலுள்ள அநேகமான நீரேந்தும் பிரதேசங்கள் மத்திய மலை நாட்டின் வலயங்களில் குறிப்பாக கண்டி மற்றும் மாத்தளை மாவட்டங்களில் அமைந்துள்ளதாலும், அத்தகைய நீரேந்தும் பிரதேசங்கள் பயினஸ் செய்கை காரணமாக கடுமையான பாதிப்புக்கு இலக்காகி உள்ளதாலும், வனச் செய்கைக்காக பயினஸ் மரங்கள் நாட்டப்படுவதை முழுமையாக நிறுத்த வேண்டியுள்ளதாலும், அவற்றை அகற்றி அதற்கு மாற்றீடாக இயற்கை வனச் செய்கை முறையை நடைமுறைப்படுத்த அரசாங்கம் தகுந்த நடவடிக்கையை எடுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

23.

பா. 23/2020

கௌரவ வேலு குமார்,— மலைநாட்டு தோட்ட மக்களுக்கு குடிநீர் வழங்கல்,— மலைநாட்டில் தோட்டங்களைச் சார்ந்துள்ள பிரதேசங்களில் குடிநீர் வழங்கும் திட்டங்கள் உரிய முறையில் நடைமுறைப்படுத்தப்படாத காரணத்தினால் அந்த மக்களின் குடிநீர்த் தேவை இயற்கை நீர் ஊற்றுக்கள், ஆறுகள், ஓடைகள் மற்றும் கிணறுகள் மூலம் பூர்த்தி செய்யப்படுவதாலும், தற்போதைய சனத்தொகை அதிகரிப்பு மற்றும் விவசாய இரசாயனப் பதார்த்தங்களின் மிகையான பயன்பாடு காரணமாக பயன்பாட்டுக்கு உகந்த நீரைப் பெற்றுக்கொள்ள முடியாத நிலை உருவாகியுள்ளதால், அந்த மக்கள் பல்வேறு சுகாதாரப் பிரச்சினைகளை எதிர்கொள்ள வேண்டியுள்ளதாலும், தோட்டப் பிரதேசங்களில் காணப்படுகின்ற நீரை வெளிப் பிரதேசங்களுக்குக் கொண்டு செல்வதன் காரணமாக நீர்ப்பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதாலும், நாட்டின் ஏனைய பாகங்களில் நடைமுறைப்படுத்தப்படுகின்ற குடிநீர் வழங்கல் திட்டங்களை இப்பிரதேசங்களிலும் நடைமுறைப்படுத்த வேண்டியதன் தேவை குறித்து கவனம் செலுத்தி அரசாங்கத்தின் குடிநீர் வழங்கல் வேலைத்திட்டத்தில் தோட்டப் பிரதேசங்களையும் உள்வாங்கத் தேவையான நடவடிக்கையை எடுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

24.

பா. 24/2020

கௌரவ வேலு குமார்,— மலைநாட்டு தொழிற்சங்க வீரர்கள் தினத்தை அங்கீகரித்தல்,— இலங்கை வரலாற்றில் பொருளாதார வளர்ச்சிக்குப் பெரும் பங்களிப்பினை வழங்குகின்ற மலைநாட்டுத் தோட்டத் தொழிலாளர்கள் தமது உரிமைகளை சனநாயகப் போராட்டங்கள் ஊடாக வென்றெடுத்துள்ளதால், அவ்வாறான போராட்டங்களில் உயிர் நீத்த தொழிற்சங்க வீரர்களை பொதுவான நாளொன்றில் நினைவுகூர வேண்டுமென்ற இலங்கை வாழ் இந்திய வம்சாவழி மலைநாட்டு மக்களின் நீண்ட கால கோரிக்கையினைக் கருத்தில் கொண்டு அதன் பிரகாரம் சனவரி 10 ஆம் திகதியன்று மலைநாட்டு தொழிற்சங்க வீரர்கள் தினத்தை அனுஷ்டிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

25.

பா. 25/2020

கௌரவ வேலு குமார்,— தோட்டங்கள் சார்ந்து காணப்படுகின்ற வீதிகளை அரசாங்கத்திற்குச் சுவீகரித்தல்,— இலங்கையில் பெருந்தோட்டத்துறைக்கு முக்கியமான இடம் வழங்கப்படுகின்றதோடு, தோட்டங்களின் உரிமை, முகாமைத்துவம் மற்றும் நிருவாகம் பல்வேறு காலக் கட்டங்களில் மாற்றங்களுக்குள்ளாகி வருவதாலும், தோட்டத் தொழிலாளர்களின் வாழ்விடங்கள் பிரதான வீதியிலிருந்து நீண்ட தூரத்தில் தோட்டங்களின் நடுவில் அமைந்துள்ளதாலும், இம்மக்கள் பயன்படுத்தும் தோட்ட வீதிகள் அபிவிருத்தி செய்யப்படாது மிகவும் மோசமான நிலையில் காணப்படுவதாலும் இந்த வீதிகளை உள்ளூராட்சி மாகாண சபை வீதிகளின் கீழ் கொண்டு வருவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

26.

பா. 26/2020

கௌரவ சமிந்த விஜேசிறி,— சகல அரச நிறுவனங்களையும் அரசுக்குச் சொந்தமான கட்டிடங்களில் நிலையப்படுத்தல்,— பொது மக்களின் வரிப் பணத்தில் பேணப்படுகின்ற அரச நிறுவனங்களை தனியார் கட்டிடங்களில் நிலையப்படுத்துவதன் மூலம் பெருந்தொகை பணம் வீணாக செலவாவதாலும், மேற்படி நிறுவனங்களை அரச கட்டிடங்களில் நிலையப்படுத்துவதன் மூலம் பெருமளவு பணத்தை சேமிக்க முடியுமென்பதாலும், சகல அரச நிறுவனங்களையும் அரசுக்குச் சொந்தமான கட்டிடங்களில் மாத்திரம் நிலையப்படுத்துவதற்கு அரசாங்கத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

27.

பா. 27/2020

கௌரவ சமிந்த விஜேசிறி,— வீழ்ச்சியடைந்துள்ள நிதி நிறுவனங்களை மீளக் கட்டியெழுப்புதல்,— ஒரு நாட்டின் பொருளாதார அபிவிருத்தி மற்றும் நிதிச் சந்தை மீது நிதி நிறுவனங்கள் முக்கிய தாக்கத்தை ஏற்படுத்துகின்ற போதிலும், கடந்த காலம் பூராகவும் இந்நாட்டின் சில நிதி நிறுவனங்கள் வீழ்ச்சியடைந்துள்ளமையினாலும், அதன் வைப்பாளர்கள் பொதுவாகப் பல பிரச்சனைகளுக்கு முகங் கொடுத்துள்ளமையினாலும் குறிப்பிட்ட நிதி நிறுவனங்களை மீள்கட்டியெழுப்புவதற்கு அரசாங்கம் துரித வேலைத்திட்டமொன்றை தயார் செய்தல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

28.

பா. 28/2020

கௌரவ சமிந்த விஜேசிறி,— உள்நாட்டின் மீன் உற்பத்தியை அதிகரித்தல்,— இலங்கையைச் சூழ கடல் காணப்படுகையில், நாட்டுக்குத் தேவையான டின் மீன்களை இறக்குமதி செய்வதற்காக வருடாந்தம் பெருந்தொகை நிதி வெளிநாடுகளுக்குச் செலவிட வேண்டி ஏற்படுவதனால் இந்நிலைமையைத் தவிர்ப்பதற்காக உள்நாட்டு டின் மீன் கைத்தொழிலை மேம்படுத்துவதற்காக துரித வேலைத்திட்டமொன்றை முன்னெடுப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

29.

பா. 29/2020

கௌரவ சமிந்த விஜேசிறி,— உள்ளூராட்சி நிறுவனங்களினால் கழிவகற்றப்படுதல்,— இலங்கையில் பெரும்பாலான உள்ளூராட்சி நிறுவனங்கள் கழிவுகளை அகற்றும் பொறுப்பினை இன்றளவில் தனியார் கம்பனிகளுக்குக் கையளித்துள்ளமையின் காரணமாக, வரி செலுத்தும் மக்களது பெருந்தொகை நிதி குறிப்பிட்ட கம்பனிகளைச் சென்றடைவதனால், குறித்த பணிகளை குறிப்பிட்ட உள்ளூராட்சி நிறுவன ஊழியர்களை ஈடுபடுத்தி மேற்கொள்வதற்குத் தேவையான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

30.

பா. 30/2020

கௌரவ சமிந்த விஜேசிறி,— உள்ளூராட்சி நிறுவனங்களில் பழுதடைந்துள்ள வாகனங்களைத் திருத்துதல்,— பெரும்பாலான உள்ளூராட்சி நிறுவனங்களின் பழுதடைந்த நிலையில் காணப்படும் வாகனங்கள் குவித்து வைக்கப்பட்டுள்ள நிலையானது மிக சாதாரண ஒரு காட்சியாக அமைந்துள்ளதாலும், குறிப்பிட்ட நிறுவனங்களுக்கு புதிதாக வாகனங்களைக் கொள்வனவு செய்வதற்குப் பதிலாக, இந்த வாகனங்களை திருத்துவதன் மூலம் பெருந்தொகை நிதியை மீதப்படுத்த முடியுமென்பதாலும், உள்ளூராட்சி நிறுவனங்களின் வாகனங்களைத் திருத்துவதற்கான துரித வேலைத்திட்டமொன்றை அரசாங்கம் தயார் செய்ய வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

31.

பா. 31/2020

கௌரவ துஷார இந்துனில் அமரசேன,— வெற்றிலைப் பயிர்ச் செய்கையாளர்களின் பிரச்சினைகளைத் தீர்த்தல்,— வடமேல் மாகாணத்தில் கணிசமானளவு குடும்பங்கள் வெற்றிலைச் செய்கையில் ஈடுபட்டுள்ளதுடன் தற்போது குறித்த வெற்றிலைப் பயிர்ச் செய்கையாளர்கள் பல பிரச்சனைகளுக்கு முகம் கொடுக்க நேர்ந்துள்ளமையால், இந்நிலைமையை தணிப்பதற்காக துரித வேலைத்திட்டமொன்று அரசாங்கத்தினால் தயார் செய்யப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

32.

பா. 32/2020

கௌரவ துஷார இந்துனில் அமரசேன,— வடமேல் மாகாணத்தில் தரிசு நிலங்களாக மாறியுள்ள வயல்களில் பயிர்ச்செய்கையை மேற்கொள்ளுதல்,— ஒரு நாட்டின் அபிவிருத்தியில் உணவுப் பாதுகாப்பு மிகவும் முக்கியத்துவம் பெறுவதனால் வடமேல் மாகாணத்தில் தற்போது தரிசு நிலங்களாக காணப்படுகின்ற வயல்களில் மீண்டும் பயிர்ச்செய்கையை மேற்கொள்வதற்கான துரிதமானதும் பொருத்தமானதுமான வேலைத்திட்டமொன்று அரசாங்கத்தினால் தயார்செய்யப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

33.

பா. 33/2020

கௌரவ துஷார இந்துனில் அமரசேன,— குருநாகல் மாவட்டத்தில் யானை-மனித மோதலைத் தீர்த்தல்,— வடமேல் மாகணத்தில் குருநாகல் மாவட்டத்திலுள்ள ஏராளமான கிராமங்களில் யானை - மனித மோதல் மிக உக்கிரமாக காணப்படுவதனால் அதற்கான நிரந்தரத் தீர்வாகப் பொருத்தமான வேலைத்திட்டமொன்று அரசாங்கத்தினால் தயார்செய்யப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

34.

பா. 34/2020

கௌரவ துஷார இந்துனில் அமரசேன,— குருணாகல் மாவட்டத்தில் சிறு குளங்களை மறுசீரமைத்தல்,— வடமேல் மாகாணத்திலுள்ள அதிகமானோர் கமத்தொழில் சார்ந்த தொழில்களில் ஈடுபடுவதானலும், அம்மக்களுடைய வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்துவதற்காக நீர் அத்தியாவசியமான காரணியொன்றாக அமைந்துள்ளதாலும் வடமேல் மாகணத்தில் காணப்படுகின்ற சிறு குளங்கள் அனைத்தையும் மறுசீரமைப்பதற்காக அரசாங்கத்தினால் உரிய நடவடிக்கைகள் துரிதமாக மேற்கொள்ளப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

35.

பா. 35/2020

கௌரவ துஷார இந்துனில் அமரசேன,— குருணாகல் மாவட்டத்திலுள்ள தொல்பொருள் ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த இடங்களைப் பாதுகாத்தல்,— குருநாகலை மாவட்டத்திலுள்ள பெரும்பாலான பிரதேசங்களில் தொல்பொருள் ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் காணப்படுவதால், எதிர்கால சந்ததியினருக்காக அவற்றைப் பாதுகாப்பதற்கு துரித வேலைத் திட்டமொன்று அரசாங்கத்தினால் தயாரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

36.

பா. 36/2020

கௌரவ எச். நந்தசேன,— வன எல்லைகள் விரிவாக்கப்படுவதன் விளைவாக விவசாயிகள் பல வருடங்களாக பயிர்ச்செய்கையில் ஈடுபடுத்திய காணிகளை அவர்கள் இழக்க நேரிடுவதால் ஏற்படும் பாதக நிலையை தடுத்து நிறுத்துதல்,— வன வளங்கள் மற்றும் சுற்றாடல் அமைச்சினால் விடுக்கப்பட்டுள்ள 2001.08.10 ஆம் திகதிய 5/2001 ஆம் இலக்கமுடைய சுற்று நிருபத்தினை அடிப்படையாகக் கொண்டு வன எல்லைகளை விரிவாக்கும் போது நீண்டகாலமாக பயிர்செய்கையில் ஈடுபடுத்தப்பட்ட விவசாயக் காணிகள் வன எல்லைகளுக்கு உள்வாங்கப் படுவதால் சம்பந்தப்பட்ட விவசாயிகளுக்கு அநீதி ஏற்பட்டுள்ளதாலும், சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்கள் பொறுப்பற்ற விதத்தில் பணியாற்றியுள்ளதாலும், இப்பாதக நிலைக்கு முகம் கொடுத்துள்ள அப்பாவி விவசாயிகளுக்கு நீதியை நிலைநாட்டுவதற்கு அரசாங்கத்தினால் பொருத்தமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

37.

பா. 37/2020

கௌரவ எச். நந்தசேன,— அரச பாடசாலைகளில் 15 வருடங்களுக்கு மேலாக கற்பித்தல் பணிகளில் ஈடுபட்ட சிவில் பாதுகாப்பு உத்தியோகத்தர்களுக்கு ஆசிரியர் பயிற்சியினை வழங்கி ஆசிரியர் சேவைக்கு உள்ளீர்த்துக்கொள்ளுதல்,— பயங்கரவாதத் தாக்குதல்கள் உக்கிரமடைந்திருந்த காலகட்டத்தில் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியிருந்த கிராமங்களில் அமைந்திருக்கும் பாடசாலைகளில் பெருமளவு ஆசிரியர் பற்றாக்குறை நிலவியதன் காரணமாக இன்று வரை, பாடசாலை மாணவர்களுக்கான கற்பித்தல் நடவடிக்கைகளில் சிவில் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் ஈடுபட்டதாலும், வடக்கு கிழக்கு மாகாணங்களில் அத்தகைய உத்தியோகத்தர்கள் ஆசிரியர் சேவைக்கு உள்வாங்கப் பட்டுள்ளதாலும், வடமத்திய மாகாணத்தின் சிவில் பாதுகாப்பு உத்தியோகத்தர்களையும் அரச சேவைக்கு உள்வாங்கிக் கொள்வதற்கு அரசாங்கம் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென இப் பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

38.

பா. 38/2020

கௌரவ புத்திக பத்திறண,— உள்நாட்டு அரிசி வகைகளின் போசாக்குக் குணம் தொடர்பில் மக்களை விழிப்புணர்வூட்டல்,— தற்போது இலங்கையிலுள்ள சந்தைகளில் கிடைக்கின்ற பழைய உள்நாட்டு அரிசி மற்றும் தற்போது பயன்படுத்தப்படுகின்ற புதிய அரிசி வகைகளின் போசாக்குக் குணம் தொடர்பாகவும், பல்வேறு நோய்களால் பீடிக்கப்பட்டுள்ளவர்கள் நுகர வேண்டிய அரிசி வகைகள் தொடர்பில் மக்களை விழிப்புணர்வூட்டல் மற்றும் விவசாயிகள் அத்தகைய நெல் வகைகளை பயிரிடுவதற்கு வசதிகளை ஏற்படுத்துவது தொடர்பாகவும் அரசாங்கம் தேசிய மட்டத்திலான நிகழ்ச்சித் திட்டமொன்றைத் திட்டமிட்டு நடைமுறைப்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

39.

பா. 39/2020

கௌரவ புத்திக பத்திறண,— ஆக்கிரமிப்புச் செடிகள் மற்றும் விலங்குகள் காரணமாக உயிரினப் பல்வகைமைக்கு ஏற்படுகின்ற பாதிப்பினைக் குறைத்தல்,— இலங்கையின் உயிரினப் பல்வகைமைக்கு பாதிப்பு ஏற்படக்கூடிய ஆக்கிரமிப்புச் செடிகள் மற்றும் விலங்குகளை இனங்கண்டு, அவற்றைப் பெயரிடுவதன் மூலம் அத்தகைய செடிகள் மற்றும் விலங்குகள் பெருகச் செய்யப்படுவதையும், இறக்குமதி செய்யப்படுவதையும் தடை செய்து இலங்கையின் சுற்றுச் சூழலைப் பாதுகாக்க அரசாங்கம் இடையீடு செய்து துரிதமாக தேவையான சட்டங்களை உருவாக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

40.

பா. 40/2020

கௌரவ குணதிலக்க ராஜபக்ஷ,— உள்நாட்டு விவசாய உற்பத்திகளின் உயர் விளைதிறன் கருதி வன விலங்குகளினால் ஏற்படுத்தப்படுகின்ற பயிர்ச் சேதத்தினைத் தடுத்தலும் பயிர் நட்டஈடு வழங்குதலும்,— சிறிய அளவிலான மற்றும் வீட்டுத்தோட்டச் செய்கையாக விவசாயத்தில் ஈடுபட்டுள்ள விவசாயிகள் பயிரிடுகின்ற சாதிக்காய், கிராம்பு, மிளகு, தேங்காய், பல்வேறு பழ வகைகள் போன்ற நிரந்தரப் பயிர்கள் மற்றும் கிழங்கு, வெங்காயம், மரக்கறிகள், நெல் போன்ற போகப் பயிர்களுக்கு மந்திகள், காட்டுப் பன்றிகள், முள்ளம்பன்றிகள், யானைகள் போன்ற பல்வேறு வன விலங்குகளினால் ஏற்படுத்தப்படுகின்ற பாதிப்பைத் தடுப்பதற்காக சம்பந்தப்பட்ட சகல அமைச்சுகளும் இணைந்து தேசிய விவசாய உற்பத்திப் பாதுகாப்புக் கொள்கையொன்றை நடைமுறைப்படுத்தும் தேசிய வேலைத்திட்டமொன்றை தயாரிப்பதற்கும், வன விலங்குகளினால் ஏற்படுத்தப்படுகின்ற பயிர்ச் சேதத்திற்கான முழுமையான இழப்பீட்டினை வழங்கும் பயிர்க் காப்புறுதித் திட்டமொன்றை உருவாக்குவதற்காகவும் அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

41.

பா. 41/2020

கௌரவ குணதிலக்க ராஜபக்ஷ,— அறநெறிப் பாடசாலைக் கல்வியை மேம்படுத்துவதற்குத் தேவையான பௌதீக வளங்களை வழங்குதல்,— அறநெறிப் பாடசாலைக் கல்வியின் மூலம் நற்பண்புகளுடன் கூடிய ஒழுக்கசீலமான சமூகமொன்றை கட்டியெழுப்புவதற்கான அடிப்படையினை உருவாக்க முடியுமென்ற போதிலும்,மேற்படி பாடசாலைகளில் நிலவும் பௌதீக வளப் பற்றாக்குறையினால் ஏற்படுகின்ற சிரமங்கள் காரணமாக அநேகமான பிள்ளைகள் அறநெறிப் பாடசாலைக் கல்வியில் கவனம் செலுத்தாத காரணத்தினால், நாட்டின் பெரும்பாலான அறநெறிப் பாடசாலைகளுக்கு அத்தியாவசிய மாணவர் மேசைகள், வாங்குகள், ஆசிரியர் மேசைகள், கரும்பலகைகள், வெண்பலகைகள், மற்றும் அதன் சிறு அறநெறி நூலகங்களுக்கான புத்தக அலுமாரிகளை வழங்குவதற்கும், அறநெறிப் பாடசாலைப் பிள்ளைகளுக்கு சிறுமியர் சீருடை (லமா சாரி), தேசிய உடை மாதிரியான உடையொன்றுக்குத் தேவையான துணிகளை வழங்குவதற்கும், தனியார் துறையினர் மற்றும் கொடையாளிகளினதும் பங்களிப்புடன் அரசாங்கம் வேலைத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

42.

பா. 42/2020

கௌரவ குணதிலக ராஜபக்ஷ,— சிறிய மற்றும் மத்திய அளவிலான தொழில் முயற்சியாளர்களை ஊக்குவிப்பதற்கு தேசிய அபிவிருத்தி வங்கியொன்றையும் பொருளாதார தலைமைத்துவமொன்றையும் கட்டியெழுப்புதல்,— இலங்கையில் அதிக வட்டிக்கு இயங்குகின்ற நுண்நிதிக் கடன்கள், நிதி நிறுவனக் கடன்கள் மற்றும் குத்தகைக்கடன்கள் பொறியிலிருந்து சிறிய மற்றும் மத்திய அளவிலான தொழில்முயற்சியாளர்களை மீட்டெடுத்து உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சந்தையினை இலக்காகக் கொண்ட புத்தாக்க மற்றும் பெறுமதி சேர்க்கின்ற தொழில்முயற்சிகளில் ஈடுபட்டுள்ள சிறிய மற்றும் மத்திய அளவிலான தொழில்முயற்சியாளர்களுக்கு, கமத்தொழில் உற்பத்தியாளர்களுக்கு மற்றும் சேவை வழங்கும் தொழில்முயற்சியாளர்களுக்கு தளர்த்தப்பட்ட நிபந்தனைகள் மற்றும் தளர்த்தப்பட்ட வட்டித் தொகையொன்றுக்கு நீண்ட காலமாக செலுத்தும் வகையிலான நிதிக் கடன்களை வழங்கும் வங்கியொன்றை தாபிப்பதற்கும், நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு தொழில் வாய்ப்புகளை உருவாக்குவதற்கு மற்றும் தொழில்முயற்சி பொருளாதார தலைமைத்துவமொன்றை கட்டியெழுப்புவதற்கும், இன்றளவில் தொழில்முயற்சித் துறையின் வளர்ச்சிக்கு உதவுகின்ற சகல நிறுவனங்களையும் ஒருங்கிணைத்து உள்நாட்டு தொழில்முயற்சி அபிவிருத்தி மற்றும் பொருளாதார மீளெழுச்சி செயலணியொன்றை உருவாகும் பொருட்டு அரசாங்கம் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

43.

பா.43/2020

கௌரவ குணதிலக ராஜபக்ஷ,— முன் பிள்ளைப் பருவ அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களைத் தரப்படுத்தல்,— ஒரு நாட்டின் எதிர்கால பிரசைகள் புத்திசாதுர்யமிக்கவர்களாவதற்கு முன் பிள்ளைப் பருவ அபிவிருத்தியானது அடிப்படையாக அமைவதனால் நாட்டிலுள்ள முன் பள்ளிகள், சிறுவர் பராமரிப்பு நிலையங்கள் மற்றும் முன் பிள்ளைப் பருவ நிலையங்களை உயர் தரத்தில் பேணிச் செல்ல வேண்டும் என்பதாலும் அந்த நிலையங்களைப் பதிவு செய்து அவை உரிய தர நியமங்களுக்கு அமைவாக பேணிச் செல்லப்படுவதனை ஒழுங்குபடுத்துவதற்கும், அவற்றைப் பேணிவரும் முயற்சியாளர்கள் மற்றும் பதவியணியினரிடம் தேசிய தொழில்திறன் சான்றிதழ்கள் (NVQ) இருப்பதனை கட்டாயமாக்குவதற்கும், அவ்வாறான நிலையங்களில் இருக்க வேண்டிய இடவசதிகள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் தொடர்பான பரிந்துரைகளை சட்டமாக்குவதற்கும், அவற்றில் பணியாற்றுபவர்களுக்கு பங்களிப்பு ரீதியிலான சமூக பாதுகாப்பு முறையிலொன்றை உருவாக்குவதற்கும், நாட்டிலுள்ள சகல கிராம சேவகர் பிரிவுகளிலும் அவ்வாறான நிலையங்களை ஆரம்பிப்பதற்காக சலுகை வட்டிக்கு கடன் வசதிகளை வழங்குவதற்கும், தேவையான கொள்கைகள் மற்றும் சட்டங்களை உருவாக்கி தேசிய முன்பிள்ளைப் பருவ அபிவிருத்திக் கொள்கையொன்றை ஆக்குவதற்கும் பொருத்தமான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டுமென இப் பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

44.

பா. 44/2020

கௌரவ குணதிலக ராஜபக்ஷ,— இருபத்தொறாம் நூற்றாண்டின் மூன்றாம் தசாப்தத்தின் சவால்களுக்கு முகங்கொடுக்கக் கூடிய கூட்டுறவு இயக்கமொன்றை உருவாக்குதல்,— இலங்கையில் தற்போதுள்ள கூட்டுறவு முறையானது இன்றைக்கு அரை நூற்றாண்டுக்கு முன்னர் நியமிக்கப்பட்ட கூட்டுறவு மறுசீரமைப்பு ஆணைக்குழுவின் பரிந்துரைகளுக்கு அமைவாக உருவாக்கப்பட்ட ஒரு முறை என்பதாலும், இந்த இயக்கமானது இருபத்தொறாம் நூற்றாண்டின் மூன்றாம் தசாப்தத்தின் சவால்களுக்கு முகங்கொடுக்கக் கூடிய அதாவது சுயஉதவி, பரஸ்பர உதவி, மற்றும் சிக்கனம் ஆசிய கூட்டுறவு கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு இந்நூற்றாண்டின் சவால்களை வெற்றி கொள்ளத்தக்க நவீன தொழில் நுட்ப பயன்பாட்டின் ஊடாக பாரிய வர்த்தக வலையமைப்புக்களுடன் சிறந்த முறையில் போட்டியிடக் கூடியவாறு விவசாயத் துறையின் மேம்பாட்டுக்கும் மூலதனப் பிரச்சனை மற்றும் சந்தைப் பிரச்சினைகளுக்கு வெற்றிகரமான மாற்று வழியாகவும் ஏற்றுமதித் துறையின் மேம்பாட்டுக்கும் ஈடுபடுத்தத்தக்க அதிக சொத்துக்களைக் கொண்ட துறை என்பதாலும் தற்போதைய கூட்டுறவு முறையில் மேற் குறிப்பிட்ட நோக்கங்களை மேம்பாடு செய்வதற்காக ஏற்புடைய புதிய கொள்கைகள் மற்றும் சட்டங்களை உருவாக்கி, கூட்டுறவு இயக்கத்தின் உண்மையான உரிமையாளர்களான கூட்டுறவு பங்குரிமையாளர்களின் அதிகாரத்தை அதிகரித்து கூட்டுறவு இயக்கத்தினை முழுமையாக மறுசீரமைப்பதற்கு அரசாங்கத்ததினால் பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

45.

பா. 45/2020

கௌரவ குணதிலக ராஜபக்ஷ,— பெண்களின் உரிமைகளைப் பாதுகாத்தல் மற்றும் பெண்களின் முன்னேற்றத்தை உறுதிப்படுத்துதல்,— பெண்களின் உடல், உள, சமூகப் பாதுகாப்பு மற்றும் முன்னேற்றத்தை ஏற்படுத்துவது நாட்டின் முக்கிய அபிவிருத்தி தேவைப்பாடொன்றாக இருப்பதனால், பெண்கள் உரிய முறையில் நடத்தப்படாமைக்கு எதிராக வழக்கு விசாரணை மூலம் தண்டனை விதிப்பதற்குப் பெண்களுக்கு எதிரான துன்புறுத்தல் துஷ்பிரயோம், பருவமடையாத சிறுமியர் அல்லது பெண்களை வன்புணர்தல் தொடர்பில் பிணை வழங்கப்படாத சட்டங்களை ஆக்குவதற்கும், பொலிஸ் மகளிர் மற்றும் சிறுவர் பிரிவின் தத்துவங்களை விஸ்தரிப்பதற்கும், பராமரிப்பு மற்றும் விவாகரத்து வழக்குகளை தாமதிக்காது தீர்த்து வைப்பதற்கு பொருத்தமான நீதிமன்ற செயன்முறையை ஏற்படுத்துவதற்கும், பஸ் வண்டிகளில் பெண்களுக்கு ஒரு பக்கமாக ஆசன வரிசையை ஒதுக்குவதற்கும், நுண் நிதிக் கம்பனிகளின் சுரண்டலுக்கு ஆளாவோரின் கடனை பதிவழிப்பு செய்வதற்கான சட்டங்களை ஆக்குவதற்கும், ஒவ்வொரு வீட்டுக்கும் நீர்

மற்றும் சமையல் நடவடிக்கைகளுக்கு குறைந்த செலவைக் கொண்ட எரி சக்தியை உறுதி செய்வதற்கும், சமயலறை உபகரணங்களை சலுகை வட்டி அடிப்படையில் கொள்வனவு செய்வதற்காக வங்கி வசதிகளைப் பெற்றுக் கொடுப்பதற்கும், விதவைப் பெண்களுக்கு கணவர் பெற்றுக் கொண்ட சம்பளம் வழங்கப்படுவதை சட்டமாக்குவதற்கும், தொழில் வாய்ப்பற்ற விதவைகளுக்கு தங்கியிருத்தல் கொடுப்பனவொன்றை அரசாங்கத்திடமிருந்து பெற்றுக் கொடுப்பதற்கும், சமமான சேவைக்கு சமமான சம்பளத்தைப் பெற்றுக் கொடுப்பதை சட்டமாக்குவதற்கும், பெண்களின் உற்பத்திகளை சந்தைப்படுத்தலுக்கு தகுந்த சந்தைப்படுத்தல் வலையமைப்பை ஏற்படுத்தவும் தேவையான கொள்கைகள் மற்றும் சட்டங்களை ஆக்குவதற்கும், அரசாங்கம் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

46.

பா. 46/2020

கௌரவ குணதிலக ராஜபக்ஷ,— இரத்தினக்கல் மற்றும் ஆபரணத் துறையின் அபிவிருத்தியை மேம்படுத்தல்,— இரத்தினக்கல் படிமங்கள் உள்ள காணிகளை இனங்காண்பது முதல் இரத்தினக்கல் சந்தைப்படுத்தல் வரையிலான நடவடிக்கைகளில் பல்வேறுபட்ட தரப்பினர்கள் சம்பந்தப்படுவதும் பல்வேறு கட்டமைப்புகள் செயற்படுவதும் இடம்பெறுகின்ற போதிலும், அவற்றுக்கு இடையிலான இடைத்தொடர்புகள் காணப்படாமை இரத்தினக்கல் மற்றும் ஆபரணக் கைத்தொழிலின் முன்னேற்றத்திற்கும் அபிவிருத்திக்கும் பாரிய தடையாக அமைவதால் இக்கைத்தொழில் தொடர்பான தேசிய முன்னுரிமைகளை உள்ளடக்கிய தேசிய கொள்கையை வகுத்து கைத்தொழிலின் உற்பத்தித் திறனை மேம்படுத்துவது சம்பந்தமான இடைத்தொடர்பை கட்டியெழுப்புவதற்கும் பெறுமதி சேர்க்கப்பட்ட இரத்தினக்கல் அல்லது இரத்தினக்கல் பயன்படுத்தப்பட்ட தயாரிப்புகளை ஊக்குவிப்பதற்கும் வரிச் சலுகை உள்ளிட்ட சலுகைகளை பெற்றுக் கொடுப்பதற்கும் இரத்தினக் கல் கைத்தொழிலில் ஈடுபட்டுள்ள சுரங்கப் பணியாளர்களின் உயிருக்குள்ள அச்சுறுத்தல் மற்றும சுரங்கங்கள் மூலம் சுற்றாடலுக்கு ஏற்படுகின்ற பாதிப்புகளை ஈடுசெய்வதற்கான காப்புறுதித் திட்டமொன்றை ஏற்படுத்துவதற்கும் அகழ்வு உரிமைப் பத்திரம் பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதனை முன் நிபந்தனையாக சட்டமாக்குவதற்கும், இரத்தினக்கல் உரிமையாளர்களுக்குக் கிடைக்கும் நிதியை மீள் முதலீடு செய்வதற்கான வாய்ப்புக்களை விஸ்தரிப்பதற்கும், இரத்தினக்கல் கொள்வனவுக்காக வருகைதரும் வெளிநாட்டவர்களுக்கு விதிக்கப்படுகின்ற கட்டுப்பாடுகளை நீக்குவதற்கும், இரத்தினக்கல் கட்டுப்பாடுகளை நீக்குவதற்கும் இரத்தினக்கல் பயன்படுத்தி கைப்பணி உற்பத்திகள் உள்ளடங்கலாக மனைசார் கைத்தொழில் வரை உற்பத்திகளை பல்வகைப்படுத்துவதற்கும் சந்தைப்படுத்தல் வரை சகல துறைகளிலும் புதிய தொழில் நுட்பத்தை பயன்படுத்தவும் பொருத்தமான கொள்கைகள் மற்றும் சட்டங்களை ஆக்குவதற்கும் அரசாங்கம் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

47.

பா. 47/2020

கௌரவ குணதிலக்க ராஜபக்ஷ,— சிறு ஏற்றுமதிப் பயிர்கள் பொருளாதார நிலையம் உட்பட ஏற்றுமதி விவசாயப்பயிர்கள் தொடர்பான புத்தாக்க கைத்தொழில் வலயமொன்றினை உருவாக்குதல்,— ஆரம்ப காலத்தில் இலங்கையில் உற்பத்தி செய்யப்பட்ட சிறு ஏற்றுமதிப் பயிர்களின் மரபுரிமையாக காணப்பட்ட “சிலோன் ஸ்பைசஸ்” என்ற நற்பெயரை மீளக் கட்டியெழுப்பி உலக சந்தையை வெற்றிகொள்வதற்காக சிறு ஏற்றுமதிப் பயிர்களை பாரிய அளவில் உற்பத்தி செய்யும் மாவட்டங்களை அடிப்படையாகக் கொண்ட பொருளாதார நிலையங்களை உள்ளடக்கியதாக அப்பயிர்கள் தொடர்பில் பெறுமதிசேர் புத்தாக்கக் கைத்தொழில் வலயங்களை உருவாக்குமாறும் இந்த ஏற்றுமதி உற்பத்திகளுக்கு தற்போது விதிக்கப்பட்டுள்ள வரிக் கொள்கையை மீளாய்வு செய்து ஏற்றுமதி விவசாயப் பயிர் கைத்தொழிற்துறையின் முன்னேற்றத்திற்கு பொருந்தும் வகையிலான வரிக் கொள்கை ஒன்றினை உருவாக்குமாறும் சிறு ஏற்றுமதிப் பயிர் உற்பத்தியாளர்களை ஊக்குவிப்பதற்கு உதவியாக அறுவடை விற்பனையின் பின்னர் கொடுப்பனவினை மேற்கொள்ளக் கூடிய முறையிலான கடன் வசதிகளை பெற்றுக் கொடுத்தல் மற்றும் அதனோடு விவசாயக் காப்புறுதி ஒன்றினையும் விவசாயிகளுக்கு பெற்றுக் கொடுக்கும் முறைமையொன்றினை ஏற்படுத்துவதற்கும் அரசாங்கத்தினால் அவசியமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

48.

பா. 48/2020

கௌரவ குணதிலக்க ராஜபக்ஷ,— கண்டிய நடனம், பாரம்பரிய கலைகள், மர வேலைப்பாடுகள், சிற்பங்கள் மற்றும் கட்டிட நிர்மாணங்களை உலக மரபுரிமைகளாக பிரகடனப்படுத்தல் மற்றும் அவற்றை பாதுகாத்தல்,—இலங்கையின் வரலாற்றுப் பெருமையையும் அடையாளத்தினையும் வெளிப்படுத்தும் பாரம்பரிய கண்டிய நடனங்கள் மற்றும் கலைகள், ஓவியங்கள், மரவேலைப்பாடுகள், சிற்பங்கள் மற்றும் கட்டிட நிர்மாணங்கள் எமது நாட்டுக்கேயுரியதும் மிக அரிதான கலாசார மற்றும் கலைகள் என்ற காரணத்தினாலும் அவற்றை உலக மரபுரிமைகளாக பிரகடனப்படுத்துவதற்கு அவசியமான நடவடிக்கைகளை மேற்கொள்ளமாறும் மேற்படி மரபுரிமைகளைப் பாதுகாத்து பேணிச் செல்லும் கலைஞர்களது சமூக, பொருளாதார அபிவிருத்தியை மேற்கொள்வதற்கும், கண்டிய மரபுரிமைகளை பாதுகாத்து, மேம்படுத்தி, முறையாக நிர்வாகம் செய்வதற்கு சட்ட ரீதியான மன்றம் ஒன்றையோ அல்லது சபையொன்றினையோ ஸ்தாபிப்பதற்கு அரசாங்கத்தினால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

49.

பா. 49/2020

கௌரவ குணதிலக்க ராஜபக்ஷ,— இலங்கையின் வெளிநாட்டுச் சேவை அலுவல்களை மேம்படுத்துதல்,— இலங்கையின் மொத்தத் தேசிய வருமானத்தில் 8% அளவு பங்களிப்பு வெளிநாட்டிலுள்ள ஊழியப்படையின் மூலம் கிடைக்கப் பெறுவதனால் குறித்த துறையினை மேம்படுத்துவதற்காகவும், வெளிநாட்டு ஊழியக் கேள்விக்கு இணையாக ஊழியர்களைப் பயிற்றுவிக்கும் நிறுவனமொன்றைத் ஸ்தாபிப்பதற்கும், வெளிநாட்டிலுள்ள பிரஜைகளுக்கு வாக்களிக்கும் சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுப்பதற்கும், அவர்களுக்கான பங்களிப்பு ரீதியிலான ஓய்வூதியச் சம்பளம் போன்ற சமூகப் பாதுகாப்பு முறைமையொன்றினை ஏற்படுத்துவதற்கும், வெளிநாட்டுச் சேவை காரணமாக ஏற்படக் கூடிய தவிர்க்க முடியாத துர்ப்பாக்கிய நிலைமைகளின் போதும், ஏற்படக் கூடிய விபத்துக்களின் போதும் நட்டஈடு வழங்கக் கூடியவாறான காப்புறுதி முறைமையொன்றினை ஏற்படுத்துவதற்கும், அவர்களது சேமிப்புகளுக்கு அதிகளவான வட்டியினை வங்கிகளினுடாகப் பெற்றுக் கொடுப்பதற்கும், அவர்களது வீடுகளை நிர்மாணிப்பதற்காக சலுகை அடிப்படையிலான வட்டி மற்றும் கடன்களை வழங்குவதற்கும், அரசாங்க தொழில் வாய்ப்புக்களை வழங்குகையில் வெளிநாட்டிலுள்ள பெற்றோர்களின் பிள்ளைகளுக்கு முன்னரிமை அளிப்பதற்கும் இலங்கைத் தூதுவராலயங்கள் மற்றம் உள்நாட்டு, வெள்நாட்டு தொழில் முகவர் நிறுவனங்கள் மூலமாக இடம்பெறுகின்ற முறைகேடுகளைத் துரிதமாக தீர்ப்பதற்கு பொருத்தமான முறைமையொன்றினை உருவாக்குவதற்கும் ஊழியர்களைப் பதிவு செய்கையில் அறவீடு செய்யப்படுகின்ற கட்டணங்களில் இருந்தும் மற்றும் வீட்டுப் பணிக்காக வெளியேறுகையில் முகவர் நிலையம் வழங்கும் பணத்தொகையில் குறிப்பிட்ட ஒரு தொகையினைப் பெற்றுக் கொண்டு அதன் மூலம் குடியகல்வுக்கு முன்னரும் அதன் பின்னருமான நம்பிக்கைப் பொறுப்பொன்றினை ஏற்படுத்துவதற்கும் அரசாங்கத்தினால் பொருத்தமான வேலைத்திட்டமொன்று ஆரம்பிக்கப்படல் வேண்டும் எனவும் இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

50.

பா. 50/2020

கௌரவ எச். நந்தசேன,— 40 வருடங்களுக்கும் அதிகமான காலம் நிரந்தர வீடுகளில் குடியுள்ள (அனுமதிப்பத்திரம் உள்ள அல்லது இல்லாத) குடியிருப்பாளர்களுக்கு காணிகளின் உரிமையை வழங்குதல்,— 40 வருடங்களுக்கும் அதிகமான காலம் நிரந்தர வீடுகளை நிர்மாணித்து குடியிருந்த வேளையில் பிற்காலத்தில் வனசீவராசிகளுக்கான பிரதேசங்களாக வர்த்தமானியில் பிரசுரிக்கப்படுதல் அல்லது மக்கள் விழிப்பூட்டப்படுதல் காரணமாக ஜயபூமி உறுதிகள் அல்லது வேறு அளிப்புப் பத்திரங்கள் கிடைக்கப் பெற்றுள்ள போதிலும், அனைத்து அபிவிருத்தி நடவடிக்கைகளும் இடைநிறுத்தப்பட்டதன் விளைவாக பதவிய – கெப்பிட்டிகொல்லாவ வீதியிலுள்ள வீடுகள், நகரம் மற்றும் ஆதார வைத்தியசாலை நிலம் மற்றும் மிஹிந்தலை இலக்கம் 564 பொத்தானை துலானேயிலுள்ள வீடுகள், அறுதியுறுதி அல்லது வரைபடங்களூடான வயற்காணிகளைக் கொண்ட குடியிருப்பாளர்களுக்கு பாரிய அநீதி இழைக்கப்பட்டுள்ளதால் மேற்படி காணிகளை விடுவித்துத் தருவதற்குத் தேவையான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

51.

பா. 51/2020

கௌரவ எச். நந்தசேன,— வடமத்திய மாகாணத்தின் அனைத்துக் கிராமங்களிலும் ஊடுகலப்பு நீர்வடி முறைமைகளைப் பொருத்துதல்,— மூல காரணம் இனங்காணப்படாத சிறுநீரக நோயாளர்களை அதிகமாகக் கொண்டுள்ள பிரதேசமாக இனங்காணப்பட்டுள்ள வடமத்திய மாகாணத்தில் தற்போது நீர்வடி முறைமைகள் பொருத்தப்பட்டு வருவதாலும், அதன் காரணமாக அதிகரித்து வரும் நோயாளர் எண்ணிக்கையில் கணிசமான குறைவு காணப்படுவதாலும் சகல கிராமங்களிலும் நீர்வடி முறைமைகள் பொருத்தப்படும் நடவடிக்கைகளைத் துரிதப்படுத்தும் வேலைத்திட்டமொன்றை அரசாங்கம் உருவாக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

52.

பா. 52/2020

கௌரவ எச். நந்தசேன,— அனைத்துக் கிராமங்களுக்குமான பிரதான நுழைவுப் பாதைகள் நிரந்தர வீதிகளாக அபிவிருத்தி செய்யப்படுதல்,— பின்தங்கிய பிரதேசங்களிலுள்ள பெரும்பாலான கிராமங்கள் ஒரு நுழைவுப் பாதையை மட்டுமே கொண்டுள்ளதாலும், அவை பல வருடங்களாக அபிவிருத்தி செய்யப்படாதுள்ளதாலும், குறிப்பிட்ட சகல நுழைவுப் பாதைகளையும் துரிதமாக அபிவிருத்தி செய்வதற்கான விசேட கருத்திட்டமொன்றை அரசாங்கம் நடைமுறைப்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.